*திரு. மு. கருணாநிதி: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் கொண்டு வந்த நம்பிக்கையின்மை தீர்மானத்தையொட்டி இறுதி நாளாக விவாதம் நடைபெற்று முடிவுறுகிற இந்தக் கட்டத்தில் மாண்பு மிகு முதல் அமைச்சர் அவர்களுடைய பதிலுக்குப் பிறகு என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஒரு மாமன்றத்தில் கொண்டுவருவது என்பது அதிசயமான ஒன்றல்ல என்பதையும் மாமன்ற விதிமுறைகளால் தரப்பட்டுள்ள உரிமையைப் பயன் படுத்திக் கொண்டு எதிர்க்கட்சிகள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஒரு வாய்ப்பாக அதனை ஏற்றுக்கொள்கிறது என்பதனையும் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தபோதே நான் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

இந்த மன்றத்தில் எத்தனையோ அமைச்சரவைகள் மாறி மாறி இருந்திருக்கின்றன என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். அந்த அமைச்சரவைகள் மீதெல்லாம் முறையோடு கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் அவையில் எடுத்துக்கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டு முடிவுற்றிருக்கின்றன என்பதும் இந்த அவையினுடைய வரலாற்றுப் புத்தகம் நமக்கு எடுத்துக்காட்டுகிற ஒரு செய்தியாகும். முறையற்ற தன்மையிலே வருகின்ற எந்த ஒரு தீர்மானமானாலும் அதை அவை நிராகரிக்கும் என்பதை நாம் அறியாதவர்கள் அல்ல.

எனவே, முறையோடு கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் ஆராய்ந்து பார்த்த பிறகு அதை முன்மொழிய எத்தனை பேர்கள் எழுந்து நிற்க வேண்டும் என்கின்ற விதிமுறை கடைப்பிடிக்கப்பட்டு அதற்கு பிறகு அலுவல் ஆய்வு குழுவில் அமர்ந்து ஆராய்ந்து நேரம் கணிக்கப் பட்டு விவாதம் வளர்ந்த காரணத்தினால் நேரம் கொஞ்சம் நீடிக்கப்பட்டு இந்த தீர்மானத்தின் மீது எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும், தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக் கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே ஆட்சியில் இருந்த நேரத்தில் இப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் பலவற்றை நாங்கள் சந்தித்து இருக்கிறோம். அன்றைக்கு நம் பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த பிரதான எதிர்க் கட்சியாக இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசுகிற நேரத்தில் மானம் மரியாதையிருந்தால் உடனடியாக இந்த அமைச்சரவை ராஜிநாமா செய்ய வேண்டும் என்கின்ற கடுமையான சொற்றொடர்களை கூறி முடித்திருக்கிறார்கள் என் பதை அவை நடவடிக்கை குறிப்பை எடுத்துப்பார்த்தால் அவைகளை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

1978 சனவரி 7] [திரு. மு. கருணாநிதி]

நான் துவக்கத்தில் எடுத்துக்காட்டியதைப் போல், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்ததையொட்டி இந்த அமைச்சரவை பதவி விலக வேண்டும் என்று குறிப்பிடவோ அல்லது அதிகமான வாக்குகளைப் பெற்று இந்த ஆட்சியை அகற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடோ, கொண்டு வரப்படவில்லை என்று சுட்டிக் காட்டி விட்ட காரணத்தினால், முன்பு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது மானம் மரியாதை இருந்தால் ஒழுங்காக ராஜினாமா செய்யுங்கள் என்று சொன்னதை போன்ற வார்த்தைகளை நாங்கள் பயன்படுத்த தேவையில்லை பயன்படுத்தவும் மாட்டோம்—பயன்படுத்தவில்லை என்பதை இந்த அவைக்கு மெத்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மன்றத்தில் உள்ள, குறிப்பாக ஜனதா கட்சியைத் தவிர மற்றவர்கள் அனைவருமே, திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த நம்பிக்கையின்மை தீர்மானத்தை எதிர்க்கிறோம் என்கிற சொல்லை பயன்படுத்தி தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாங்கள் எதிர்க்கிறோம் என்றும் சொல்லாமல், ஆதரிக்கிறோம் என்றும் சொல்லாமல் இந்தத் தீர்மானத்தை பயன்படுத்திக்கொண்டு அரசு எவ்வகையில் தங்களுடைய பாதையை செப்பனிட்டுக் கொள்ளவேண்டும், எவ்வகையில் அந்த வழி செம்மையாக இருந்திட வேண்டும், எந்தெந்த குறைகள் களையப்பட வேண்டும் என்கின்ற கருத்துக்களை எப்படி திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துக்காட்டியதோ, அதைப்போலவே ஜனதாக் கட்சியை சார்ந்தவர்களும் அவர்களுடைய கொள்கைகளுக்கேற்ப தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், ஒன்றை நான் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த பிறகு கவனிக்கிறேன். நண்பர் ஜேம்ஸ் அவர்கள் எடுத்துக் காட்டியது போல், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மீது கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஆளும் கட்சியின் தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒரு காலத்தில் தோழமைக் கட்சிகளாக ஆக முடியும் என்று எண்ணுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்களும் இன்றைக்கு இங்கே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது கொண்டு வரப்பட்டிருக்கின்ற நம்பிக்கையின்மை தீர்மானமோ என்று ஐயுறுகின்ற அளவுக்கு இந்தத் தீர்மானத்தின் மீது பேசியவர்கள் மிகக் கடுமையாக விமர்சித்ததை இந்த மாமன்றமும் நன்கு அறியும், நாட்டுக்கும் நன்கு தெரியும்.

ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். ஆறு மாத காலத்திற்குள்ளாக ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் தேவைதானா, அதை திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே கொண்டு

வரலாமா என்கின்ற பிரச்னையை பல்வேறு உறுப்பினர்கள் எழுப்பினார்கள். இதற்கு இந்த அவையில் முன் மாதிரி இருக்கிறது என்பதை இன்று காலையில் பேசிய மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் கூட எடுத்துக் காட்டினார்கள்.

ஆனால், அதற்கு ஒரு விதிவிலக்கு உண்டு என்று சுட்டிக் காட்டினார். நான் அந்த விதிவிலக்கிற்குள் நுழைய விரும்பவில்லை.

1957 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிந்து, அதற்கு முன்பு கேரள மாநிலப் பகுதிகளும், ஆந்திர மாநிலப் பகுதிகளுமாக ஒருங்கிணைந்த சென்னை ராஜதானி, சென்னை ராஜ்யம் என்று அந்த பகுதிகள் இணைந்த ஒரு மாநிலமாக நம்முடைய தமிழகம் இருந்தபோது, மாநில அளவில் மொழிவாரியாக அவைகள் பிரிக்கப்பட்டு, மொழிவாரி மாநிலம் என்ற வகையிலே, மாநிலங்கள் ஒரு தனி ஸ்டேட் என்கிற அந்த உரிமையைப் பெற்று, 1957 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்று முடிந்து, பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் அமைச்சர் அவை 13—4—1957 ஆம் ஆண்டு தோன்றுகிறது. அப்படி 13-4-57 அன்று தோன்றிய காமராஜ் அவர்களுடைய அமைச்சர் அவையை எதிர்த்து 28—10—57 அன்று 6 மாத காலத்தில் என்னுடைய மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் திரு கல்யாணசுந்தரம் அவர்கள் ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இந்த மன்றத்திலே முன்மொழிந்தார்கள் என்பது அவைக் குறிப்பிலே காணக்கிடக்கின்ற ஒரு தகவல் ஆகும்.

அது மாத்திரமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தார்கள். அவர்கள் மறைந்த பிறகு, 1969 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி நான் முதல் அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். 10 ஆம் தேதி பொறுப்பேற்றுக் கொள்கிறேன், இந்த மன்றத்திலே அதற்கு 15 நாட்கள் கழித்து, 25 ஆம் தேதி இந்த அமைச்சர் அவையின் மீது காங்கிரஸ் கட்சி ஒரு கண்டனத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்தது. மாதக் கணக்குகூட இல்லை; நாள் கணக்கில், அதுவும் அண்ணா அவர்களை இழந்துவிட்டு, எப்படி அந்த ஆட்சிச் சக்கரத்தை சுழற்றப் போகிறோம் என்று தவித்துக் கொண்டு, ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்த நேரத்தில், எண்ணி 15 ஆம் நாள் இந்த அமைச்சர் அவையின் மீது ஒரு கண்டனத் தீர்மானம் இந்த மாமன்றத்தில் வந்திருக்கிறது. அப்படி வரலாமா என்று நான் கேட்கவில்லை. அப்படி வரலாமா என்று கேட்டவர்களுக்கு, ஏற்கனவே முன் உதாரணங்கள் இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுவதற்காகச் சொல்கின்றேனே அல்லாமல், அவற்றையெல்லாம் குறைகூற விரும்பவில்லை.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், மற்றும் தோழமை கட்சிக்காரர்கள், இவர்கள் எல்லாம் பேசுகின்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த

போது, என்னென்னத் தவறுகளை செய்தது என்பதையெல்லாம் சுட்டிக்காட்டுவதற்குத் தான் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் தங்களுடைய நேரத்தில் பெரும் பகுதியை எடுத்துக் கொண்டார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆனால் ஒன்றை நான் நன்றி உணர்ச்சியோடு பாராட்டுவேன். அவர்களுடைய பேச்சிலே பெரும் பகுதி, இந்த அரசுக்கு அவர்கள் சொல்லவேண்டிய அறிவுரைகளை, தர வேண்டிய எச்சரிக்கைகளை ஆளும் கட்சிக்கு தோழமைக் கட்சிக்காரர்களும், மற்றுமுள்ள எதிர்க்கட்சிக்காரர்களும் தந்தமைக்காக நான் அவர்களுக்கு எல்லாம் நன்றி கூறிக் கொள்கிறேன். அவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைத் தங்களால் முடிந்த அளவுக்குத் தாக்கினார்கள். அதற்காகவாவது குறைந்தபட்சம் இந்த தீர்மானத்தைக் கொண்டுவந்த எனக்கு ஒரு நன்றியாவது தெரிவித்திருக்கலாம். அதைக்கூட அவர்கள் தெரிவிக்க மனம் இல்லாமல் போய் விட்டார்கள் என்பதை எண்ணி நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன்.

ஒரு ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்படவில்லை என்பதை நான் திரும்பத் திரும்ப சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை கவிழ்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, இன்றைக்கு ஆளும்கட்சியிலே இருக்கின்றவர்கள் அன்றைக்கு எடுத்த முயற்சிகளையெல்லாம் கடந்த கால வரலாறு நமக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

1972 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஒரு அமளி தோன்றி, அதன் காரணமாக ஒரு பிளவு ஏற்பட்டு, அதன் பிறகு, அந்த அடிப்படையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் நாட்டில் எந்த அளவிற்குப் பெருகின. எத்தனை பேருந்துகள் உடைக்கப்பட்டன?

[மாலை 5-50]

எத்தனையோ லாரிகளும், பேருந்து வண்டிகளும் என்னுடைய இனிய நண்பர், இன்றைய முதலமைச்சர் படத்தை ஒட்டிக் கொண்டால்தான் தெருவிலே போகலாம், சாலைகளிலே ஓடலாம் என்ற அளவுக்கு வழிமறித்துத் தாககப்பட்டன. அன்று அமைச்சராக இருந்த மன்னை நாராயணசாமி இராமநாதபுரம் கூட்டங்களுக்குச் சென்றபோது எப்படி தாக்கப்பட்டு காயமுற்றார்கள்? நாங்கள் சென்ற இடங்களில் எந்த அளவுக்கு அமளிகள் நடைபெற்றன என்பதையெல்லாம், கடந்த காலத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் அவைகளையும் இணைத்துப் பார்க்க வேண்டுமென்று கடந்த காலத்தைப் பற்றிப் பேசியவர்களுக்கு மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரணி நடத்தப்பட்டது—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை எதிர்த்து. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் வீட்டுக்கும் ஊர்வலங்கள் எடுக்கப்பட்டன. 'இந்த அரசு லஞ்ச லாவண்ய அரசு நீ இந்த அரசில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தால், திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினராக இருந்தால் நீயும் அந்த லஞ்ச லாவண்யத்திற்கு ஒப்புதல் தருகிறாய் என்று பொருள்; எனவே நீ அந்தக் கட்சியிலிருந்து விலகி விடு' என்ற அளவுக்கு எம்.எல்.ஏ.க்கள் வீடுகளுக்கு மனுக்கள் தருகிற வகையில் எல்லா எம்.எல்.ஏ. க்கள் தொகுதிகளிலும் 170 எம்.எல்.ஏ.க்களுடைய வீடுகளுக்கும் அன்றைய தினம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் ஊர்வலம் எடுத்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரணி எடுத்து இங்குள்ள கவர்னரிடத்தில் புகார் மனு தரப்பட்டது. அந்தப் புகார் மனு வரலாறு என்னவென்றால்—திராவிட முன்னேற்றக் கழகத்திலே கழகப் பொருளாளர் வெளியேற்றப்பட்ட பிறகு, அவருடைய ஸ்டுடியோவில் பல கூட்டங்களில்பேசிய நேரத்தில் பேசியதாகப் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. அப்போது கழகப் பொதுக் குழு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர் பேசியதாக சுதேசமித்திரன் பத்திரிகையில் வந்த செய்தி என்னை வெளியேற்றிய இந்த மந்திரிகளுடைய ஊழலை அம்பலப் படுத்துவேன்' என்று பேசியதாக கொட்டை எழுத்தில் மித்திரன் பத்திரிகையில் செய்தி வந்தது. அந்த பத்திரிகை வந்த அடுத்த இரண்டொரு நிமிஷத்திற்குள்ளாக அவரிடமிருந்து ஒரு தந்தி, தந்தியின் நகலும் கிடைத்தது. சுதேசமித்திரன் பத்திரிகைக்குத் தந்தி கொடுத்து 'நான் அப்படிப் பேசவில்லை. மந்திரிகள் ஊழல் என்ற வார்த்தையைப் பயன் படுத்தவில்லை. நீங்கள் செய்தியைத் தவறாகப் போட்டிருக்கிறீர்கள்' என்று சுதேசமித்திரன் பத்திரிகைக்குத் தந்தி கொடுத்து தந்தியின் நகல் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்கும் எனக்கும் அனுப்பி வைத்தார்கள். பொதுக் குழுவில் கூட அந்தத் தந்தி படித்துக் காண்பிக்கப்பட்டது. இந்த விளைவு ஏற்பட்டு, பொருளாளர் கட்சியில் இருந்து வெளியேறிய அந்தக் காலம் வரை, வெளியேறிய பிறகும் சுதேசமித்திரன் பத்திரிகைச் செய்தியை மறுக்கிற வகையில் இப்படிப்பட்ட புகார்கள் எழவில்லை.

ஆனால் யார் எந்த வகையில் முயற்சித்தார்களோ, அந்த ஆராய்ச்சிகளுக்குள் செல்ல விரும்பவில்லை—அவர்கள் பெற்ற வெற்றியின் அடையாளமாக புகார்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. அந்தப் புகார்ப் பட்டியலை எடுத்துச் சென்று ராஜ்பவனத்தில் ஆளுநரிடம்தரப்பட்டது. ஆளுநர் தான் அதைப் பெற்றுக் கொள்கிற உரிமை படைத்தவரா என்ற பிரச்சினையை எழுப்பிய பிறகு ஜனாதிபதியிடம் புகார் மனு கொண்டு போய்க் கொடுக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து பல்வேறு கூட்டங்களில் இப்படிப்பட்ட ஊழல் செய்கிற ஆட்சி தமிழகத்தில் இருக்கக் கூடாது, அகற்றப்பட

வேண்டுமென்று தொடர்ந்து, அந்தப் போராட்டம் நெருக்கடி காலத்தில் இந்திரா காந்தி அம்மையார் ராஜபவனத்திற்கு வந்த போது அவரிடத்தில் மனுக் கொடுத்து, ஆட்சியை அகற்றுங்கள் என்று சொல்லுகிற அளவுக்கு வெடித்தது.

அவைகளை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டு பழி வாங்கு கிற முறையில் இந்த ஆட்சியை ஐந்து ஆண்டுகளுக்குள் கவிழ்த்து விடவேண்டுமென்ற கெடு நினைப்பு திராவிட முன்னேற்றக் கழகத் திற்கு நிச்சயமாக ஏற்படாது என்பதை இந்த மாமன்றத்தில் அறிஞர் அண்ணாவின் படத்திற்கு முன்னால் நின்றுகொண்டு நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மக்கள் தீர்ப்பை பிறகு மக்களேதான் திரும்பப் பெற வேண்டும். மக்கள் தான் அப்படித் திரும்பப் பெற வேண்டுமே தவிர, கிளர்ச்சிகள் மூலமாக, புரட்சிகள் மூலமாக, அமளிகள் மூலமாக, கலவரங்கள் மூலமாக, சட்டம் ஒழுங்கைக் கெடுத்து விடுவதன் மூலமாக ஒரு அரசைக் கவிழ்த்துவிட வேண்டுமென்ற மனப்பான்மை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

எடுத்துச் சொல்லப்பட்ட குறைபாடுகளைப்பற்றி விமர்சிக்கிற நேரத்திலே இங்குள்ள கட்சியினுடைய தலைவர்கள், வேறு பல கட்சியினுடைய உறுப்பினர்கள் எல்லாம் உங்கள் ஆட்சியிலே நடைபெறவில்லையா உங்கள் ஆட்சியிலே நடைபெறவில்லையா என்று கேட்பது இந்த ஆட்சியிலே நடைபெறுகின்ற தவறுகளுக்கு சமாதானமாக ஆகி விடாது என்பதை மாத்திரம் நான் கோடிட் டுக் காட்ட விரும்புகிறேன். நான் எடுத்து வைத்த குற்றச் சாட்டுகளை மறுப்பதற்குப் பதில் முன்பு இவைகளையெல்லாம் நீங் களே செய்யவில்லையா என்று விவாதிப்பதாக இருந்தால் பிறகு நீங்களே தொடர்ந்து ஆட்சியிலே இருந்திருக்கலாம் இவர்கள் ஏன் வரவேண்டும் என்று தான் கேள்வி நடுநிலையாளர்கள் உள்ளத்திலே எழும். ஏற்கனவே இருந்த ஆட்சி தவறுகளைச் செய்திருந்தால் அதே தவறுகளைச்செய்ய இந்த ஆட்சி தேவைதானா என்று நிச்சய மாக நடுநிலையாளர்கள் உள்ளத்தில் கேள்வி எழும்.

குறிப்பாக, இங்கே விவசாயிகள் போராட்டத்தைச் சொன் னார்கள். அதற்கு நம்முடைய முதலமைச்சர் என் சார்பிலே நல்ல பதிலை அளித்து விட்டார்கள் என்று நம்புகிறேன். விவசாயி கள் போராட்டத்திலே ஒரு பைசா கட்டணத்தைக் குறை என் பதற்காக அவ்வளவும் நடைபெற்றதாக அவர்கள் சொன்னார் களேயல்லாமல் உண்மையிலே சொல்ல வேண்டுமானால் மின் கட்டணத்தை 1 பைசா ஏற்றியதற்காகத் தான் அவ்வளவும் நடைபெற்றது என்றுதான் திருத்திப் படித்தாக வேண்டும். ஒரு பைசா ஏற்றியதற்காக இவ்வளவும் நடைபெற்றது. முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல் கோவை மாவட்டத்திலே கட்டை வண்டிகள் கொண்டு வரப்பட்டு ஏறத்தாழ மூன்று நாட்கள் கோவை நகரத்திலே வீதிகளிலே, தெருக்களிலே,

சந்து பொந்துகளிலே எல்லா இடங்களிலும் நிறுத்தி வைத்து போக்குவரத்துக்கு இடைஞ்சலைப் பயங்கரமாக ஏற்படுத்திய போதும் காவல் துறை பொறுமையோடு இருந்தது, என்று முதலமைச்சர் அவர்களே அதையும் எடுத்துச் சொன்னார்கள். போலீசார் ஜீப்பிலே சென்றபோது அவர்கள் கொல்லப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டபோது போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டி யிருந்தது என்று அன்றைக்கு நாமெல்லாம் ஒன்றாக இருந்த நேரத்திலே விளக்கி இருக்கிறோம் என்பதை முதலமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டார்கள். விவசாயிகள் போராட்டத்திலே இப்படியெல்லாம் அமளி ஏற்படவில்லையா என்று கேட்ட நண்பர்களுக்கு அது தகுந்த பதிலாக அமையும்.

கீழ்வெண்மணிச் சம்பவம்பற்றி இங்கே திரு. ரமணி அவர்கள் பேசினார்கள். முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா காலத்திலே அந்தச் சம்பவம் நடைபெற்றது என்று எடுத்துச் சொல்லி அன்றைய தினம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்த திரு. ராமமூர்த்தி அவர்கள் அண்ணா அவர்களைச் சந்தித்து என்ன என்ன முறைகளை கீழ்வெண்மணி சம்பவத்தையொட்டி கடைப்பிடிக்கவேண்டுமென்று எடுத்துச் சொன்னார்களோ அவைகளையெல்லாம் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள் எடுத்தார்கள், நடவடிக்கைகளை எடுத்தார்கள் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித்தோழர் திரு. உமாநாத் அவர்கள் பேசியபோது சொன்னார்கள், கழக அரசு தொழிலாளர் நல விரோத அரசு ஆக இருந்தது என்று குறிப்பிட்டார்கள். கழக அரசு தொழிலாளர்நல விரோத அரசாக இருந்திருக்குமேயானால் கோவையிலே மூடப்பட்ட ஆலைகளை—கதவுகளுக்கு வெளியே நின்று கதறிக் கொண்டிருந்த ஆலைத் தொழிலாளர்களின் நிவாரணத்திற்காக இந்தியாவிலேயே எந்த மாநிலமும் தராத அளவிற்கு 5 லட்சம் ரூபாயை நிவாரணமாகக் கொடுப்பதற்குக் காரணமாக இருந்தது கழக அரசு தான் என்பதை மறந்துவிடக் கூடாது.

அதைப் போலவே நெருக்கடிநிலை என்ற பெயரால் தொழிலாளர்களுக்கு போனஸ் தரஇயலாது என்று சொல்லப்பட்ட போது அந்தத் தொழிற்சங்கங்களை நடத்துகிறவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆக இருந்தாலும்கூட, அவர்கள் எங்களிடத்திலே எடுத்துச் சொல்லி, போனஸ் என்ற பெயரால் கொடுக்காவிட்டாலும் எப்படியோ தொழிலாளர்களுக்கு அந்தப் பணம் வந்து சேர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அதற்குப் பிறகு நானும் அப்போது தொழிலாளர்நல அமைச்சராக இருந்தவரும் கோவைக்குச் சென்று ஆலை முதலாளிகளையும் தொழிற் சங்கநண்பர்களையும் அழைத்து—அப்போது திரு. ரமணியும் இருந்தார்என்றுநினைவு—உட்கார வைத்துப் பேசி போனஸ் கொடுக்கா விட்டாலும் தொழிலாளர்களுக்கு ஒரு முன்

பணம் கொடுங்கள் என்று முன்பணம் கொடுக்கச் சொல்லி சட்டத்தில் சந்து பொந்துகளைக் கண்டுபிடித்து அந்தத் தொழிலாளர்களுக்கு நன்மையைச் செய்யலாம் என்று நன்மை செய்து ஆலை அதிபர்களிடமிருந்து முன் பணத்தை வாங்கித் தந்த அரசாக தி.மு.க. அரசு இருந்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாலை 6-00]

மாணவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி நாங்கள் பேசிய காரணத்திஞல் அடிக்கடி இந்த அவையிலே உச்சரிக்கப் படுகின்ற உதயகுமாரினுடைய பெயரும், பாளையங்கோட்டை சம்பவமும், திருச்சி கிளைவ் ஹாஸ்டல் சம்பவமும் பல உறுப்பினர்களால் எடுத்து மீண்டும் மீண்டும் விளக்கப்பட்டன. நான் இந்த அவையிலேயே கடந்த கூட்டத்தொடரில் மிக விளக்கமாக, பாளையங்கோட்டை சம்பவத்தைப்பற்றி வைக்கப்பட்ட நீதி விசாரணையின் நீதிபதி என்ன அறிக்கை தந்திருக்கிருர்கள் என்பதைப் படித்துக் காட்டினேன். அந்தச் சம்பவத்திலே சில அதிகாரிகள் தவறு செய்திருக்கிருர்கள், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்ற குறிப்பு இருந்து அவ்வாறு நடவடிக்கை எடுக்கப் பட்டது என்பதையும் சொன்னேன். ஹார்துநாதன் சம்பவத்திற்குப் போலீசார் காரணம் அல்ல, அவன் ஓடுகின்ற நேரத்தில் ஆற்றிலே விழுந்து இறந்து விட்டான் என்று நீதிபதி சொன்ன குறிப்பையும் படித்துக் காட்டினேன். இதைப் போலவே இன்றைக்கு இருக்கின்ற ஆளும் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்ருக இருந்த நேரத்திலே ஏற்பட்டது. அண்ணமலைப் பல்கலைக் கழக சம்பவம், உதயகுமார் சாவு அந்த நேரத்திலே அந்த சாவைப் பற்றி எதிர்க்கட்சிக்காரர்கள் பேசிய நேரத்தில் அதற்குத் தகுந்த பதில் அளித்துக் கொண்டிருந்தவர் இன்றைக்கு எதிரிலே வீற்றிருப்பவர்.

[பேரவைத் தலைவர் தலைமை]

அந்த அண்ணமலைப் பல்கலைக் கழக சம்பவத்திற்கும் நீதி விசாரணை வைக்கப்பட்டு உதயகுமார் சாவுக்கு காவல்துறையினர் பொறுப்பு அல்ல, மற்ற சம்பவங்களுக்கு நீதிபதியின் குறிப்பு அடங்கிய அறிக்கையைப் படித்துக் காட்டினேன். அந்த அறிக்கை அப்பொழுதே அவையிலே வைக்கப்பட்டது. கிளைவ் ஹாஸ்டல் சம்பவத்தில் போலீசார் அத்துமீறி நடந்து கொண்டார்கள், அங்கே உள்ள பஸ் தொழிலாளர்களும், போலீசாரும் சேர்ந்து கொண்டு மாணவர்களை அடித்தார்கள் என்ற வகையிலே நீதிபதியின் முடிவு அறிக்கையின் சார்பில் வெளியிடப்பட்டது. அதையும் சொல்லியிருக்கிறேன். இவ்வளவுக்கும் பிறகும் திரும்பத் திரும்ப உதயகுமார், ஹார்துநாதன், கிளைவ் ஹாஸ்டல் என்று பேசிக் கொண்டிருப்பது அந்த அறிக்கையைப் படித்துப் பார்த்த பிறகும் அல்லது விளக்கியதற்குப் பிறகும் முறையாகாது என்பது என்னுடைய எண்ணம்.

நான் கேட்பதெல்லாம் மதுரையிலே நடைபெற்ற மாணவர்கள் கிளர்ச்சிக்கு ஏன் நீதி விசாரணை வைக்கக் கூடாது என்று கேட்டால் அதற்குச் சரியான விடையளிக்காமல், லூர்துநாதன், பாளையங்கோட்டை என்று பேசிக் கொண்டிருந்தால் போதாது. கிளைவ் ஹாஸ்டல் சம்பவத்திற்கு நீதி விசாரணை வைக்கப்பட்டதா இல்லையா? பாளையங்கோட்டை சம்பவத்திற்கு நீதி விசாரணை வைக்கப்பட்டதா இல்லையா? அண்ணாமலைப்பல்கலைக் கழக சம்பவத்திற்கு கழக அரசில் நீதி விசாரணை வைக்கப்பட்டதா அல்லவா? அதைப் போல மதுரையில் மாணவர்களுடைய சம்பவத்திற்கு அமைச்சர்கள் ஒரு வகையான அறிக்கையும், அதிகாரிகள் ஒரு வகையான அறிக்கையும், ஏடுகளில் ஒருவகையான செய்தியும் வந்ததால் கேட்கிறேன், அங்கே தாக்கப்பட்டு, கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, இரத்தக் காயங்களோடு மாணவர்கள் வேதனைக்கு ஆளானார்களே. அதற்காக ஒரு நீதி விசாரணை வைக்க வேண்டுமென்ற எதிர்க்கட்சிகளினுடைய கோரிக்கையை, முன்னேற்றக் கழகத்தினுடைய கோரிக்கை மட்டுமல்ல, இங்கே இருக்கின்ற எல்லாக் கட்சிக்காரர்களுடைய கோரிக்கையை ஏன் இந்த அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய மற்றொரு குற்றச்சாட்டாகும்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி பேசிய பேச்சுகளுக்கெல்லாம் கூட எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று இங்கு குறிப்பிட்டார்கள். அப்படியொன்றும் திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது கழக அரசின்மீது இப்பொழுது கூறிய இந்தக் குறைகளைவிட வேறு குறைகள் எதையும் சொல்லித் தாக்கிவிடவில்லை என்பதையும் நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஒன்றைச் சொன்னார்கள். ஏதோ வள்ளுவருடைய கோட்டத் திறப்பு விழாவைப் பெரிய ஆடம்பரமாக நடத்துவதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு திட்டமிட்டது என்றும், அதற்காகத் திருத்தணியிலுள்ள தங்க ரதத்தைக் கொண்டு வந்து, அந்தத் தங்க ரதத்தைச் சென்னை வீதியிலே இழுத்து வருவது என்றும், அந்த ரதத்திலே அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த கருணாநிதி பவனி வருவது என்றும் ஒரு திட்டம் போடப்பட்டது, அந்தக் காரணத்தால் தான் ஆட்சி கவிழ்க்கப்பட்டது என்றெல்லாம்கூட இங்கே சில உறுப்பினர்கள் காரணங்களை எடுத்துச் சொன்னார்கள். திருத்தணி ரதம் எப்படிப்பட்டது என்பதைப்பற்றி மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். அதிலே அங்கே உள்ள உற்சவ மூர்த்தியை மட்டும் தான் வைக்க முடியும். அதுவும் தங்க ரதம் என்றால் திருவாரூர் பெரிய தேர் போல நிச்சயமாக இருக்காது. அப்படிப்பட்ட ஒரு தேரைச் செய்வதற்கு எவ்வளவு தங்கம் வேண்டுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் இப்படி தங்க ரதங்கள், தங்க வாகனங்கள் இப்படிபட்ட விழாக்களுக்குக் கொண்டு வரப்படுவது

தவறும் இல்லை, அதற்கு முன்மாதிரியும் இருக்கிறது. இங்கு அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அந்த உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பல ஆலயங்களிலிருந்து வெள்ளி ரிஷப வாகனங்கள், தங்க ஆட்டுக்கடா வாகனங்கள், வெள்ளி யானை வாகனங்கள் வரவழைக்கப்பட்டு அந்த யானை வாகனத்திலே அண்ணா அவர்களோ அல்லது குதிரை வாகனத்திலே நாவலர் அவர்களோ, அல்லது ரிஷப வாகனத்திலே நானோ அல்லது ஆட்டுக்கடா வாகனத்திலே பேராசிரியர் அன்பழகன் அவர்களோ உட்கார்ந்து கொண்டு எப்படி ஊர்வலத்திலே உலகத் தமிழ் மாநாட்டிலே செல்லவில்லையோ அதைப் போல எப்படி அந்த வாகனங்கள் பெரிய லாரிகளிலே வைத்து காட்சிப் பொருளாக ஊர்வலத்திலே எடுத்துச் செல்லப்பட்டனவோ அதைப் போல திருத்தணி ரதமும் ஊர்வலத்திலே எடுத்து செல்லப்படலாமா என்று அப்பொழுதிருந்த அரசால் யோசிக்கப்பட்டதேயல்லாமல், ஏதோ தங்க ரதத்தைக் கொண்டு வந்து கருணாநிதி பவனி போக வேண்டுமென்ற பெரிய முயற்சி ஏற்பட்டது என்று அதையும் சதித் திட்டம் போல வெளியிட்டார்கள்.

நல்ல வேளை, அதற்கு ஒரு '307' போடப்படவில்லையென்கின்ற வகையிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதைப் போன்ற குற்றச் சாட்டுக்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசு பற்றி இங்கே பேசிய நண்பர்களால் சுமத்தப்பட்டதேயல்லாமல் வேறு ஒன்றும் அல்ல. அவைகள் நாங்கள் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் திசை திருப்புகின்ற வகையிலே அமைந்திருக்கின்றனவே அல்லாமல் வேறு அல்ல. நான் எடுத்துச் சொன்ன குற்றச் சாட்டுக்களை நம்பிக்கையில்லா தீர்மானத்தை நீங்கள் ஆதரிக்காவிட்டாலும், அந்தக் குற்றச் சாட்டுக்கள் சரியானவைதான், அவைகளை இந்த அரசு ஆலோசித்து தக்க முறையிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அந்த நண்பர்கள் பேசியிருப்பார்களானால் நான் மெத்தவும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

அவசரக் காலச் சட்டத்தை எதிர்த்ததைப் பற்றிச் சொன்னார்கள். 20 அம்சத் திட்டத்தை எதிர்க்கலாமா, 5 அம்சத் திட்டத்தை ஆதரிக்கலாமா என்று கேட்டார்கள். நான் இன்றைக்கும் சொல்கிறேன், 5 அம்சத் திட்டத்தை 20 அம்சத் திட்டத்தை நாங்கள் ஆதரிக்க தவறமாட்டோம். ஏனென்றால் 20 அம்சத் திட்டத்திலே சொல்லப்பட்ட விஷயங்களானாலும், 5 அம்சத் திட்டத்திலே சொல்லப்படுகிற விஷயங்களானாலும் அவைகள் எதுவும் புதிதாக இந்திரா காந்தி அம்மையார் அவர்களாலோ அல்லது அவர்கள் புதல்வர் சஞ்சய் காந்தி அவர்களாலோ அறிவிக்கப்பட்டு விட்ட திட்டங்கள் அல்ல. நம்முடைய நிதியமைச்சர் மனோகரன் அவர்கள், அந்த நேரத்திலே எடுத்துக் காட்டியதைப் போல, சஞ்சய் காந்தியினுடைய ஐந்து அம்சத் திட்டங்கள் பெரியார் ராமசாமி அவர்களால் எடுத்துச் சொல்லப்பட்ட திட்டங்கள் என்ற அளவிலே, அதைப் போல, இந்திரா காந்தி

யாரால் எடுத்துச் சொல்லப்பட்ட 20 அம்சத் திட்டங்கள் ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசால் இங்கே நிறைவேற்றப்பட்டு நடைபெற்று வருகிற திட்டங்கள் என்கின்ற வகையில்தான் இருக்கின்றன.

20 அம்சமானாலும், 5 அம்சமானாலும் இன்னும் 5 அம்சத்தைச் சேர்த்து, 30 அம்சமானாலும் எத்தனை அம்சங்களானாலும் மக்களுடைய நல்வாழ்வுத் திட்டங்களாக இருந்தால், பொருளாதாரத் திட்டங்களாக இருந்தால், அவைகளை திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறது என்றுதான் அறிவிக்கப்பட்டது. 20 அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்ட மறுநாளே நாங்கள் அதை ஆதரித்தோம். 5 அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்ட மறுநாளே நாங்கள் அதை ஆதரித்தோம். ஆனால் எங்களுடைய கேள்வியெல்லாம், இந்த 20 அம்சத் திட்டம், 5 அம்சத் திட்டம் இவைகளை நிறைவேற்ற ஒரு அவசரச் சட்டம் தேவைதானா ? இதுதான் எங்கள் கேள்வி. நீங்கள் எத்தனை அம்சத்தை வேண்டுமானாலும் கொண்டு வாருங்கள். 100 அம்சத்தை வேண்டுமானாலும் கொண்டு வாருங்கள் ஆனால், அவைகளை நிறைவேற்ற ஒரு அவசரச் சட்டம் தேவைதானா என்று தான் எங்கள் செயற்குழுவிலே நாங்கள் தீர்மானம் நிறைவேற்றினோம். உங்களுடைய சமதர்மத் திட்டங்களை நிறைவேற்ற இன்றைக்கிருக்கிற எந்தச் சட்டங்கள் குறுக்கே நிற்கின்றன? அப்படி இல்லாதபோது இந்த அவசரச் சட்டம் தேவைதானா என்று எங்களுடைய செயற் குழுவிலே தீர்மானம் போட்டுக் கேட்டோம். எங்களுடைய பொதுக் குழுவிலே கூட தீர்மானமாக நிறைவேற்றினோம். இது பற்றி எங்கள் மாநாட்டிலும் தீர்மானம் போட்டுக் கேட்டோம். எனவே, 20 அம்சத் திட்டம் மீதோ, 5 அம்சத் திட்டம் மீதோ எங்களுக்கு எந்த விதமான குறைபாடும் கிடையாது.

ஆனால், ஒரு நண்பர் கூடப் பேசினார். 20 அம்சத் திட்டத்தை எதிர்த்தீர்கள். ஆனால், சஞ்சய் காந்திக்குப் பயந்து கொண்டு 5 அம்சத் திட்டத்தை ஆதரிக்கவில்லையா என்று ஒரு நண்பர் கூடப் பேசினார். ஆனால், இன்றைய முதலமைச்சர் அன்றைய தினம் அந்த சஞ்சய் காந்தியினுடைய திட்டத்தை எதிர்த்தார் என்றுகூட இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், உடுப்பியிலே நடைபெற்ற படப்பிடிப்பு நிகழ்ச்சிக்குச் சென்ற முதலமைச்சர் இருபது அம்சத் திட்டம் ஐந்து அம்சத் திட்டம் என்று பிரிப்பதையே நான் ஏற்கவில்லையென்று கருத்தை நிருபர்களிடம் சொன்னார்கள். அதை அவர் சொன்னதும், சென்னையிலே இங்குள்ள பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் அதைக் கண்டித்து ஒரு அறிக்கை விடுத்தார்கள். அந்த அறிக்கை வந்தவுடனே இன்றைய நமது நிதி அமைச்சர் மனோகரன் அவர்கள் ஒரு விளக்கம் தந்து பேசி அது பத்திரிகையிலும் வந்திருக்கிறது.

''புரட்சித் தலைவரை பத்திரிகை நிருபர்கள் உடுப்பியில் சந்தித்தார்கள். அப்போது பிரதமரின் 20 அம்சத் திட்டத்தையும் சஞ்சய் காந்தியின் 5 அம்சத் திட்டத்தையும் ஒன்றாக இணைத்து 25 அம்சத் திட்டமாக அறிவித்திருக்கலாம் அல்லவா என்று நிருபர்கள் கேட்டனர். சஞ்சய் திட்டத்தில் கலாச்சாரப் புரட்சிக்கான கரு இருக்கிறதா என்றும் கேட்டனர்.

பிரதமர் இருபது அம்சத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். சஞ்சய் காந்தி ஐந்து அம்சத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இவை இரண்டையும் ஒன்றாக அறிவித்திருக்கலாம் என்றார். ஏனெனில் எதிர்க் கட்சிகளுக்கு எந்த வகையிலும் எந்தப் பிரச்சாரத்திற்கும் இடம் கொடுத்து விடக் கூடாது என்பதில் புரட்சித் தலைவர் மிகக் கூர்மையாக இருக்கிறார். அவர் திட்டத்தை விமர்சிக்கவில்லை; எதிர்க்கவில்லை; 'ஆலோசனை— நல்ல நோக்கோடு கூறினார்.

மனச்சாட்சி, அரசியல் தெளிவு உள்ளவர்கள் இதில் என்ன தவறு காண்பார்கள்? இதற்காக சஞ்சய் காந்தியை எதிர்ப்பதாக சஞ்சய் காந்தியைப் பார்க்காத சின்னஞ்சிறார்கள் கூறுகிறார்கள்'' என்று மனோகரன் அவர்கள் சொன்னார்கள். அவர் எப்போதுமே மற்றவர்களை சின்னஞ்சிறார்கள் என்று வாடிக்கையாகக் கூறுவதைப் போல் கூறியிருக்கிறார்.

[மாலை 6-10]

அவர் மீண்டும் பேசுகிறார், ''நான் மூன்று முறை சஞ்சய் காந்தியைச் சந்தித்திருக்கிறேன். புரட்சித் தலைவர் இரண்டு முறை சந்தித்திருக்கிறார். சஞ்சய் காந்தியின் கருத்துக்களை, திட்டங்களை, திறமையை புரட்சித் தலைவர் பாராட்டியிருக்கிறார். இளைஞராக உள்ள சஞ்சய் காந்தியை புரட்சி தலைவருக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. பிரச்சினைகளைப் புரிந்து, தெரிந்து வேகத்தோடு செயல்படுகின்ற சஞ்சய் காந்தியின் திறமை என்னைக் கவர்ந்தது'' என்று புரட்சித் தலைவர் கூறினார். பெரியவர் பக்தவச்சலம் அனாவசியமாக வம்பை வளர்க்கிறார். அவருக்குக் கோபம் வருகிறது. சஞ்சய் காந்தியின் வளர்ச்சியைக் கண்டு புரட்சித் தலைவர் பொறாமைப் படுகிறாராம். சஞ்சய் காந்தியை இவர்கள் ஏமாற்ற முடியாது. இவர்களுடைய திறமை அவருக்கு நன்றாகத் தெரியும். வரதட்சணை ஒழிப்பு, மரம் நடுதல், குடும்பக் கட்டுப்பாடு, தீண்டாமை, அறியாமை ஒழித்தல் இவைகளை நாங்கள் வரவேற்கிறோம். இவைகள் எல்லாம் பெரியார் சொன்ன திட்டங்கள்தான்'', என்று எனது அருமை நண்பர், இன்றைய நிதி அமைச்சர் மனோகரன் அவர்கள் பேசி அது அப்போது ஏடுகளிலே வந்து—அவர்கள் கட்சி ஏடுகளிலே வந்த குறிப்பைத்தான் நான் இங்கே படித்துக் காட்டினேன்.

ஆகவே நான் மீண்டும் சொல்கிறேன். 20 அம்சத் திட்டமானாலும் சரி, அல்லது 5 அம்சத் திட்டமானாலும் சரி திட்டங்

மக்களுடைய நல்வாழ்வுக்கு தேவை என்கின்ற வகையில் நாங்கள் அன்றைக்கும் எதிர்க்கவில்லை இன்றைக்கும் எதிர்க்கவில்லை. அவைகளை நிறைவேற்ற மக்களுடைய உரிமைகளைத் தட்டிக் கழித்துவிட்டு, உரிமையைக் கேட்பவர்களின் கைகளைக் கட்டிப் போட்டுவிட்டு, காலையிலே பேராசிரியர் கூறியதைப் போல ஒரு சர்வாதிகாரச் சூழ்நிலையில் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்து விட்டு, நிறைவேற்ற வேண்டுமா?

பாசன வசதியைப் பெருக்க நெருக்கடி நிலைக்கு என்ன தொடர்பு? அதைப் போலவே மின் விளக்குகளை அதிகப்படுத்த நெருக்கடி நிலைக்கு என்ன தொடர்பு? வருமான வரியை 6,000 ஆண்டு வருமானத்திற்கு என்ற உச்ச வரம்பை 8,000 ரூபாய் என்று மாற்றுவதற்கும் நெருக்கடி நிலைக்கும் என்ன தொடர்பு? இந்தக் கேள்விகளைத்தான் அன்றைக்குக் கேட்டோமே அல்லாமல் 20 அம்சத் திட்டத்திற்கும், 5 அம்சத் திட்டத்திற்கும் அன்றைக்கும் விரோதிகள் அல்ல, இன்றைக்கும் விரோதிகள் அல்ல. ஆனல் அவசர கால சட்டத்திற்கு, அன்றும் சரி, இன்றும் சரி, என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் விரோதமாக இருக்கும், ஜனநாயகத்தைக் காப்பாற்ற, சர்வாதிகாரத்தைப் புறங்கான திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் தயாராக இருக்கும் என்பதை நான் மிக, மிக திட்டவட்டமாக எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய முன்னுரையில் இந்திரா காந்தி அவர்களுடைய தமிழக வருகையைப் பற்றியும், அப்போது நடைபெற்ற சில சம்பவங்களைப் பற்றியும் சுருக்கமாக எடுத்துரைத்திருந்தேன். அதைப் பற்றி என்னுடைய அருமை நண்பர், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மாரிமுத்து அவர்கள் மிகத் தெளிவாக, விரிவாக—இப்போது இசை விழா நடக்கின்றது, அதையொட்டி சொல்ல வேண்டுமானல், விஸ்தாரமாக (குறுக்கீடு) நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பாஷையில் சொல்ல வேண்டுமானல் சாங்கோபாங்கமாக எடுத்துச் சொன்னர்கள். அவர்கள் சென்னையிலே வந்து இறங்கியதிலிருந்து, மதுரைக்குச் சென்று பிறகு திருச்சி வந்தடைந்து, காஞ்சிக்குள் நுழைந்ததிலிருந்து மீண்டும் சென்னைக்கு வந்தது வரையில் அவர்கள் எடுத்துரைத்து திராவிட முன்னேற்றக் கழகம் பெரியதொரு வன்முறையில் இறங்கிவிட்டது. மதுரை சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன், திராவிட முன்னேற்றக் கழகம்தான் இதற்கெல்லாம் காரணம் என்று கூட எடுத்துச் சொன்னர்கள்.

காலையிலே பேசிய எங்கள் கட்சியின் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் பேசுகிற நேரத்திலே குறிப்பிட்டார்கள் அங்கே முன்னேற்றக் கழகத்தினைச் சேர்ந்தவர்கள் போலீஸ் அதிகாரிகளை அணுகி—ஏன் இதைச் சொல்லுகிறேன் என்ருல் அதை முதலமைச்சர் அவர்கள் விசாரிக்கக் கடமைப்பட்டிருக்கிருர்கள் என்பதற்காக சொல்லுகிறேன்—அங்கே முன்னேற்றக்

1978 சனவரி 7] [திரு. மு. கருணாநிதி]

கழகத்தினர் போலீஸ் அதிகாரிகளை அணுகி இந்திரா காந்தி வருகிறபோது நாங்கள் கறுப்புக்கொடிக் காட்டுவதாக இருக்கிறோம் எனவே அதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யுங்கள்—போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யுங்கள்—நாங்கள் உங்களுக்கு முன்கூட்டியே அறிவிப்பது எங்களுடைய கடமை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போது அந்த போலீஸ் அதிகாரி நான் சில கான்ஸ்டேபிள்களை அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார். ஏதோ 50, 60 பேர்கள் கருப்புக் கொடி காட்டப்போவதாக என்று எண்ணிக்கொண்டு சில கான்ஸ்டேபிள்களை அனுப்பி வைப்பதாக அதிகாரிகள் சொன்னார்கள். ஆனால் நம்முடைய மாரிமுத்து அவர்களின் கணக்குப்படி 3,000 ஆனால் விமான நிலையத்தில் அம்மையாரை வரவேற்க வந்தவர்கள் லட்சம் பேர். கறுப்புக்கொடி காட்டியவர்கள் 3000 என்று சொன்னார்கள். அந்த மக்கள் தொகை எண்ணிக்கை கட்சிக்கு கட்சி, பத்திரிகைக்குப் பத்திரிகை வேறுபடும். அதிலே நுழைந்து நாம் ஆராய்ச்சி நடத்தத் தேவையில்லை. என்ன நடந்தது? திராவிட முன்னேற்றக் கழகத்தாரும் மற்றவர்களும் எங்கே கறுப்புக்கொடி காட்டுவதற்கு இடம் அளிக்கப்பட்டதோ அந்த இடத்திற்கு அருகாமையிலேயே இந்திரா காந்தியை வரவேற்க காங்கிரஸ் கட்சிக்கும் இடம் ஒதுக்கப்பட்டது.

மிக மிக அருகாமையில் இடம் ஒதுக்கப்பட்ட நேரத்தில், ஜீப்பில் ஏறிக்கொண்டு மதுரையில் இருக்கும் கங்கிரஸ்காரர்கள், சில முக்கியமான பிரமுகர்கள் ஜீப்பில் ஏறிக்கொண்டு அங்கும் இங்கும் செல்லுவது, கறுப்புக்கொடி ஏந்தி நிற்கும் கழகத் தோழர்களைப் பார்த்து கேலி புரிவது, என்று இப்படிப் பட்ட சேட்டைகளில் அவர்கள் ஈடுபட்ட காரணத்தால் சில குழப்பம், குமுறல் வெடித்து, குமுறி, ஒரு சூழல் ஏற்பட்டபோது மதுரை மாவட்டச் செயலாளர் பொன். முத்துராமலிங்கம் அவர்கள் போலீஸ்காரர்களை கேட்டுக்கொண்ட காரணத்தால் போலீஸ் வேனில் ஏறி, யார் என்ன சொன்னாலும், தயவு செய்து நீங்கள் அமைதியாக இருங்கள் என்று கறுப்புக்கொடி காட்ட இருந்த தோழர்களிடத்தில் பலமுறைசென்று அவர்கள் அறிவிப்பு செய்து இருக்கிறார். அந்த அளவிற்கு அமைதியாக நடக்கவேண்டுமென்று மதுரை மாவட்ட தலைவர்களும், மற்ற மாவட்டத்திலிருந்து வந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும், அந்தந்தப் பகுதி தலைவர்களும் அக்கறை காட்டினார்கள். மிளகாய்ப்பொடி தூவவில்லை என்று மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நான் மீண்டும் மீண்டும் எதிர் கட்சித் தலைவருக்குச் சொல்லிக் கொள்கிறேன், கறுப்புக் கொடி காட்டுவதற்கு திராவிட முன்னேற்றக் கழக தோழர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் காங்கிரஸ்காரர்கள் அனுமதிக்கப்படவே இல்லை. இந்திரா காந்தி அம்மையாருக்கு வரவேற்பு கொடுப்ப

தற்கு விமான நிலையத்திற்குச் சென்றார்களே தவிர அந்த கறுப்புக் கொடி காட்டிய இடத்தில் கூடி இருக்கவில்லை என்று நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: அவர் தரப்பு வாதம் அவர் எடுத்து வைக்கிறார். எனக்குத் தெரிந்த உண்மையை நான் சொல்கிறேன், அவ்வளவு தான். ஒரு போலீஸ் அதிகாரி கூட காங்கிரஸ்காரர்கள் ஜீப்பில் மிளகாய்பொடி இருந்தது என்று சொல்லி, அது பத்திரிக்கையில் வந்து இருக்கிறது. பிறகு என்ன காரணமோ, 2 நாள் கழித்து நான் அப்படிச் சொல்லவில்லை என்று மறுப்பு அறிக்கை விட்டு விட்டார்கள். இடையில் நடந்தது என்ன என்று ஆராய நான் விரும்பவில்லை. அதைப்பற்றிய சர்ச்சைக்கும் நான் வர எண்ணிடவில்லை.

கழகம் வன்முறையில் நம்பிக்கை அற்றது என்பதையும், வன்முறையை நிச்சயமாக ஏற்றுக் கொள்ளாது என்பதையும் இன்றல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் இருந்தே எடுத்துச் சொல்லி, நாங்கள் செயல்பட்டு வந்து இருக்கிறோம். ஆனால் வன்முறை சில நேரங்களில் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது என்பதை இப்போது நடைபெற்ற போராட்டங்களில் மாத்திரம் அல்ல, உலக உத்தமர் அமைதியின் சொரூபம், காந்தியடிகள் நடத்திய சௌரி சௌரா போராட்டத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்கு தீ வைக்கப்பட்டு, அந்த காவல் நிலையத்தில் இருந்த அனைத்து காவலர்களும் தீயினால் இறந்தார்கள் என்று வன்முறை சம்பவம் காந்தி அடிகள் காலத்திலேயே நடைபெற்று இருக்கிறது.

அதைப்போலவே, 'வெள்ளையனே வெளியேறு' என்று காந்தியடிகள் போராட்டம் நடத்திய நேரத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்கு எல்லாம் காந்தியடிகள் தான் காரணம், அவர்களுடைய பேச்சும் எழுத்தும் தான் காரணம் என்று அப்போது வைஸ்ராய்யாக இருந்த லார்ட் லின்லித்கோ தெரிவித்தார். அந்த வைஸ்ராய் சொன்னதற்கு காந்தியடிகள் பதில் தந்தார் "என்னையும் மற்ற காங்கிரஸ் தலைவர்களையும் கைது செய்த காரணத்தால் மக்களுடைய உணர்ச்சிகள் தூண்டப்பட்டு அதன் காரணமாக வன்முறை ஏற்பட்டன" என்று காந்தியடிகள் அப்போதே அந்த வைஸ்ராய் சொன்னதற்கு பதில் அளித்து இருக்கிறார். இதைச் சொல்கிற காரணத்தால் காந்தியடிகள் காலத்தில் வன்முறை நடைபெற்றது. இப்போது நடைபெறக் கூடாதா என்று நான் வாதிடுவதாக தயவு செய்து யாரும் கருதிடத் தேவையில்லை.

பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் நடத்திய போராட்டம் பற்றி நண்பர்கள் எடுத்துக் காட்டினார்கள். அவர்கள் நடத்திய போராட்டம், அவர்கள் நடத்திய பேரணி வன்முறை இல்லாமல் நடைபெற்றது என்று சொன்னார்கள். அந்தப் பேரணியில் சென்னை மாநகர வீதியில், அண்ணா சாலையில் காமராஜர் முன் அமர்ந்து ஊர்வலம் சென்றபோது பின்னால் வந்த ஊர்வலப்

பகுதியினர் பல தியேட்டர்களை அடித்து நொறுக்கி பெரும் சேதத்தை விளைவித்தார்கள் என்ற செய்தியும் மறுநாள் பத்திரிக்கையில் வந்தது. அதற்கு பெரும் தலைவர் காமராஜர் பொறுப்பாளி என்று சொல்லமாட்டேன்.

அது மாத்திரமல்ல. மதுவிலக்கை மீண்டும்அமல் நடத்தவேண்டுமென்று அவர் நடத்திய போராட்டமானாலும், விலைவாசி உயர்வைக் கண்டிக்கும் போராட்டமானாலும், அந்தப் போராட்டங்கள் இத்தனை நாள் நடைபெறுகிறது என்று தெரிந்து கொண்டு, அத்தனை நாள் அவர்கள் சிறையில் வைக்கப்பட்டார்கள். 12-13 நாள் போராட்டம் நடத்தினார்கள் என்றால், போராட்டம் முடிந்ததும் விடுவிக்கப்பட்டார்கள். அதற்கிடையில், திருச்சி சிறைச்சாலையில் இருந்த காங்கிரஸ்காரர்கள் அங்கே இருந்த வார்டர்களோடு ஒரு அமளியில் ஈடுபட்டு அங்கே இருந்த டவர்—கோபுரம்—அந்த சிறைச்சாலைக்குள்ளே இருந்த டவர் பகுதிக்குச் சென்று, அங்கே மேலே ஏற்றப்பட்டு இருந்த தேசியக் கொடியைச் சுழற்றிஎறிந்து விட்டு, காங்கிரஸ் கட்சியின் கொடியை டவரில் பறக்க விட்டார்கள். அப்படி செய்ததற்காக 50 பேர் மீது வழக்கு தொடரப்பட்டு, அந்த வழக்கைக்கூட திராவிட முன்னேற்றக் கழகம் திரும்பப் பெற்றுக்கொண்டது என்ற அந்தச் செய்தியையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[மாலை 6.20]

இங்கே வன்முறையை திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டவில்லை; திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது தான் வன்முறை தூண்டப்பட்டது. ஆளுங்கட்சிக்காரர்கள் தங்களுடைய முழு பலத்தையும் காட்டி, இனிமேல் யாரும் இங்கேயிருக்கின்ற ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சிகளில் ஈடுபடக்கூடாது என்ற வகையில், இந்திரா காந்தியினுடைய வருகையைப் பயன்படுத்திக் கொண்டுவன்முறை பிளான் செய்யப்பட்டது என்று சொல்லுகின்ற அளவுக்கு, வன்முறை, அடக்குமுறை இவைகளில் ஈடுபட்டார்கள் என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டாகும். நாங்கள் கைது செய்யப்பட்டதாக சொல்லப்படுகிறதோ அல்லது அகற்றப் பட்டதாகச் சொல்லப்படுகிறதோ, அந்த இடத்தில் நடைபெற்றது என்ன? சென்னை மாநகரத்தில், இந்திரா காந்தி வருவதாக ஒரு வழி சொல்லப்பட்டது. ஆனால் காஞ்சீபுரத்திற்கு அந்த அம்மையார் செல்ல பூவிருந்தவல்லி வழியை விட்டுவிட்டு வேறு வழியாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். அப்படி பூவிருந்தவல்லி வழியாகச் செல்லுவதாக இருந்தது ரத்து செய்யப்பட்டது என்று அங்கே உள்ளவர்களுக்கு அறிவிக்கப்பட்டதும், பூவிருந்தவல்லி தோழர்கள் கறுப்புக்கொடி காட்டுவதற்கு அந்த அம்மையார் அந்தப் பக்கம் வரவில்லை என்றதும், யார் மீதும் கல் எறிந்ததாகவோ, யாரும் வன்முறைக்கு இடம் கொடுத்தார்கள் என்றோ, எந்தச் செய்தியும்கிடையாது. அமைதியாகக் கலைந்து சென்றார்கள். அந்த அம்மையார் அந்த வழியாக வரவில்லை என்று அறிவிக்

பட்ட காரணத்தால். அதைப்போல சென்னையில் கிண்டி பகுதியில் அந்த அம்மையார் அந்த வழியாகச் செல்லவில்லை என்று அறிவிக்கப்பட்டதா என்றால் அறிவிக்கப்படவில்லை. அங்கே கூடியிருந்த மக்கள் கூடுகின்ற வரையில் அனுமதிக்கப்பட்டார்கள். பிறகு தடியடி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம், 2 பேர் மாண்டார்கள் என்ற செய்தி வருகிறது.

அந்தச் செய்தியைத் தொடர்ந்து கறுப்புக்கொடி நிகழ்ச்சிக்குத் தலைமை வகிக்கின்ற சீதாபதி, வீராசாமி, நீலநாராயணன் இவர்கள் கைது செய்யப்பட்டதாக செய்தி வருகிறது. அவர்கள் கைது செய்யப்பட்டால், அடுத்த அணிக்கு நாங்கள் தலைமை வகிக்க வேண்டும்—நானும், பேராசிரியரும், சாதிக்கும், ப. உ. ச.-வும், ஆசைத்தம்பியும் என்று அறிவித்திருந்தோம். அதன்படி செல்லுகிறோம். நாங்கள் செல்வதற்கு முன்பு திராவிடக் கழகத் தலைவர் மணியம்மையார் அவர்கள் அங்கே செல்லுகிறார்கள். அன்னை மணியம்மையார் அவர்களை காவற் துறையினர் எவ்வளவு கூறத் தகாத வார்த்தைகளை எல்லாம் இந்த மன்றத்தில் மீண்டும் சொல்லமுடியாத வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்திப் பேசினார்கள் என்பதையும், அவைகளை மீண்டும் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்வது அழகாக இருக்காது என்பதையும் நான் மெத்த வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அதைப் போல, வீராசாமி, நீல நாராயணன், சீதாபதி மற்றவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். நானும், பேராசிரியரும், சாதிக்கும், ப.உ. ச.-வும் காரில் செல்லுகிறோம். நாங்கள் மறைமலை அடிகள் பாலத்திற்கு மத்தியில் செல்லுகின்ற நேரத்தில் போலீசார் எங்களை வளைக்கிறார்கள். வளைத்து அங்கே நிறுத்துகிறார்கள். காரைத் திருப்பச் சொல்கிறார்கள். கார் திருப்பப்பட்டு நிறுத்தப்படுகிறது. காரை திருப்பி நிறுத்தி வைத்துவிட்டு, எங்களை எங்கே அழைத்துச் செல்ல வேண்டும் என்று போலீஸ் அதிகாரிக்கு ஆணையிடாமல், அல்லது எங்கள் காரைஓட்டி வந்த காரோட்டிக்கும் உத்திரவு பிறப்பிக்காமல், காரை அங்கேயே நிறுத்தி வைத்துவிட்டு, எங்களுடைய கார் மணியம்மையார், வீரமணி போன்றவர்கள் காரை எல்லாம் வைத்துவிட்டு. . . .

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: சபாநாயகர் அவர்களே, என்குயரி கமிஷன் ஒன்று அமுலில் இருக்கும்போது, தயவு செய்து அதில் நுழைவது எந்த அளவுக்கு நியாயம் என்பதை நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, நீதி விசாரணைக் கமிஷனிலும் இவைகள் எல்லாம் சொல்லப்படக் கூடிய வெளிப்படையான விஷயம் தான். நீதிமன்றத்தில் இருக்கிற விஷயமாக இருந்தால், சப்ஜுடீஸ் என்பதால் அதில் நுழைவது தவறாக இருக்கலாம். நான் பொதுப்படையான விஷயங்களைச் சொல்லுகிறேன். நிலைமையைச் சொல்லுகிறேன். எங்களுடைய காரை சுற்றி கண்ணீர்ப் புகை வெடிகள் வெடித்துக் கொண்டிருந்தன.

1978 சனவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்சினை வழக்கு மன்றத்திற்கு சென்றிருப்பதைப் பற்றி நீதி விசாரணையில் இருப்பதை யொட்டி பேசக்கூடாது என்பது தான் பொதுவான மரபு.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, இது பற்றி கிரிமினல் வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருவதால், இந்த விஷயங்கள் இங்கே கூறப்படக் கூடாததுதான்.

திரு. மு. கருணாநிதி: கிரிமினல் வழக்கு பதிவு செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப் படவில்லை. எப்.ஐ.ஆர். என்ற நிலையில் பேசலாம் அதற்குச் சட்டத்தில் இடம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வேண்டுமானால் நாளை ஆராய்ந்து அதைத் தலைவர் தீர்ப்புச் சொல்லலாம்.

THRU R. MARGABANDU F.I.R. has been filed and investigation is going on and it will hamper investigation. So it is *subjudice*.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் இதைப்பற்றி சிந்தித்து என்ன முடிவு பெற வேண்டுமோ அதை நாளை மறுதினம் தரலாம் என்றார்கள். அதுவரையில் இதைப்பற்றி செய்தி ஏடுகளில் வராமல் இருந்தால் தான் தலைவர் தீர்ப்பு என்ன என்பது சரியாக அமையும். ஏனெனில் தலைவர் தீர்ப்பு வரட்டும் என்று சொல்லும்பொழுது தீர்ப்பு வருகிறவரையில் இந்தப் பிரச்னை வெளி வர வேண்டாம் என்பது தான். அதையொட்டிய தீர்ப்பு வந்த பிறகு அனுமதிக்கலாம் என்றால் பத்திரிகையில் வரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஒன்றைச் சொல்லு கிறேன். 68-ல் 5-வது பிரிவு 'மோஷன்' ஆனாலும், 'ரிசொலூஷன்' ஆனாலும்,

"No motion which seeks to raise discussion on a matter pending before any statutory tribunal or statutory authority performing any judicial or quasi-judicial functions or any commission or court of enquiry appointed to enquire into, or investigate, any matter shall ordinarily be permitted to be moved" :

"Provided that the Speaker may, in his discretion, allow such matter"

என்று இருப்பதால், முதலில் யோசித்தேன் மேலோட்டமாக பேசுகிறார் என்று. ஆனால் நடந்த வரலாற்றையே சொல்லு கிறார்கள். அது விசாரணைக்கு குந்தகமாகலாம். இன்வெஸ்டி கேஷன் ஆகி சார்ஜஸ் போடுவதற்கு இடையூறு ஏற்படலாம். தயவு செய்து எதிர்க்கட்சித் தலைவர் அதை விட்டுவிட்டு வேறு விஷயத்திற்குப் போகலாம்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, துப்பாக்கிப் பிரயோகத்திற்கு மாத்திரம் விசாரணை என்ற காரணத்தால் கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தைப் பற்றி பேசலாம் என்று பேசினேன். இருந்தாலும் தங்களுடைய தீர்ப்பிற்கிணங்க மேலும் விரிவாக நான் பேச விரும்பவில்லை. ஆனால் போலீசாரால் தாக்கப்பட்ட அரங்கநாதன் சட்டமன்ற உறுப்பினர் அவையில் இருக்கிறார். வேறு இடத்திலோ கைது செய்யப்பட்ட இளம்பரிதி எம்.எல்.சி., எலமந்தா எம்.எல்.சி. இவர்கள் எல்லாம் போலீஸ் ஸ்டேஷனில் வைத்து அடிக்கப்பட்டிருக்கிறார்கள். இது அந்த இடத்துப் பிரச்னைக்கு சம்பந்தப்பட்டதல்ல. கைது செய்யப்பட்டவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் அடைக்கப்பட்டார்கள். மிகக் கொச்சையான வார்த்தைகளால் இழிவான வார்த்தைகளால் போலீஸ் அதிகாரிகளால் அர்ச்சிக்கப்பட்டார்கள். எங்களுடைய தோழன் வான்மதி தன்னுடைய காலை இழக்கிற ஒரு கொடுமை நிகழ்ந்திருக்கிறது. பல தோழர்கள் ஊனமுற்றிருக்கிறார்கள். 144 தடை உத்தரவு போடப்பட்டது உண்மை. நான் கேட்பதெல்லாம் 144 தடை உத்தரவு என்றால் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று கட்சிகளுக்கு மாத்திரம் தானா? 144 தடை உத்தரவில் காங்கிரஸ் கட்சிக்கு விதி விலக்கு அளித்துள்ளார்களா? 144 தடை உத்தரவை போடும்பொழுது 5 பேருக்கு மேல் போகக் கூடாது அல்லது 5 பேருக்கு மேல் ஒரு இடத்தில் கூடக்கூடாது என்கிற பொதுவான உத்தரவு பிறப்பிப்பார்கள். அதற்கு விதிவிலக்கு போடுவார்கள் என்றால் சவ ஊர்வலம், கல்யாண ஊர்வலம், மதச் சடங்குகளுக்கு 144 உத்தரவில் விதிவிலக்கு இருக்கும். ஆனால் இங்கே திராவிடர் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் 144 தடை உத்தரவைப் போட்டுவிட்டு காங்கிரஸ் கட்சி கூட்டம் நடத்தலாம் காங்கிரஸ் கட்சியின் ஊர்வலம் நடைபெறலாம் என்கிற அளவிற்கு நிலைமையை உருவாக்கினார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் திருமண விழாவிற்கு தலைமை வகிக்க வந்திருப்பார்களேயானால் நான் இந்தப் பிரச்னையை எழுப்பமாட்டேன். சவ ஊர்வலம் ஏதாவது நடைபெற்றதா என்றால் அந்தச் சவ ஊர்வலம் எங்கள் கட்சியின் சார்பில் செத்துப்போன தீனன், பாபு, ஜனதாக் கட்சியைச் சேர்ந்த குண்டடிப்பட்ட சுப்பிரமணி ஆகியோருக்கு சவ ஊர்வலம் நடைபெற்றது. அல்லது காங்கிரஸ் கட்சி மத ஸ்தாபனமா என்றால் அதுவும் இல்லை.

[மாலை 6.30]

இந்த மூன்றிலும் இடம் பெறாத ஒரு கட்சிக்கு 144 பொது உத்தரவில் எப்படி தனியாக ஒரு விதி விலக்கு அவர்களுக்குத் தரப்பட்டது என்பது தான் எனக்குப் புரியவில்லை. இப்படி மக்களின் உரிமைகளை, தங்கள் இஷ்டத்திற்கு பாரபட்சமான நிலையில் அவர்களுடைய உரிமைகளைப் பறித்துக்கொள்ளுகிற ஒரு

போலீஸ் ராஜ்யம் என்று பெயர் சூட்டத் தக்க அளவுக்கு இந்திரா காந்தி அம்மையார் இங்கே வந்த நேரத்தில் நடைமுறைகள் இருந்தன என்று சொன்னால் அது தவறாகாது என்பதே என்னுடைய கருத்தாகும். அதற்கெல்லாம் சிகரமாகத் தான் 307-வது பிரிவு அங்கிங்கெனாதபடி எங்கும் இன்று போடப்படுகின்றது. மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் சரண் சிங் அவர்கள் இரண்டு மூன்று முறை எச்சரித்து இருக்கிறார். காவல் துறைக்கு அறிவுரை வழங்கி இருக்கிறார். சட்ட விரோதமான உத்தரவுகளை போலீசார் நிறைவேற்றத் தேவை இல்லை என்ற அளவுக்கு இன்றைய மத்திய உள்துறை அமைச்சர் சரண்சிங் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ஆனால், இன்றைக்கு எத்தனை பொய் வழக்குகள் 307-வது பிரிவின் கீழ் தி.மு.க. வினர் மீது போடப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கொலை முயற்சிக்குச் சதித் திட்டம் என்று வழக்கு. சதிசெய்வது என்பது, கொலை செய்ய சதி செய்தார்கள் என்றிருக்கும். கொலை முயற்சிக்குச் சதித் திட்டம் என்ற வகையில் எங்கள் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. குற்றப்பத்திரிகை இன்னமும் தாக்கல் செய்யப்படவில்லை. அது தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை நடைபெறுகிற நேரத்தில், பல விஷயங்கள் வெளி வர இருக்கின்றன.

ஆனால், நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி, நாங்கள் மாத்திரமல்ல. இங்கே உள்ள ஏடுகள் மட்டுமல்ல. இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற இங்கே உள்ள இந்தியன் எக்ஸ்பிரஸை சொல்லவில்லை—என்ன காரணமோ, இங்கே அந்தச் செய்தி வெளியிடப்படவில்லை—டில்லியிலுள்ள இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில், இந்திரா காந்தி வந்திருந்த போது போலீசார் நடந்து கொண்ட விதத்தை எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். ''இந்திரா காந்திக்குக் கொடுக்கப்பட்டிருந்த போலீஸ் பந்தோபஸ்து, அவர் அவசர நிலையின் போது முடி சூடா மகாராணியாக வந்த போது இருந்ததைவிட பன் மடங்கு அதிகமாக இருந்தது. அன்று காலை 6 மணி முதல் எழும்பூர் ஸ்டேஷனை வளைத்துக் கொண்டு, உள்ளே இருந்து யாரும் வெளியில் செல்லவும், வெளியிலிருந்து யாரும் உள்ளேயும் செல்ல யாரும் அனுமதிக்கப்படவில்லை. எழும்பூர் இரயில் நிலையமே போலீசாரால் வளைத்துக்கொள்ளப்பட்டு, ஸ்டேஷன் முன் செல்ல எவரும் அனுமதிக்கப்படவில்லை. பந்தோபஸ்து என்ற பெயரால், டெபுடி கமிஷனர் ஒருவர் இருந்தார். நகர் முழுவதுமே அவசர கால நிலை இருந்தது போலவும், போலீஸ் அதிகாரிகள் மட்டும் செல்ல வாய்ப்பு உள்ளவர்களாக இருந்தது. அரசிடமிருந்து அடையாளச் சீட்டு வாங்கிய பத்திரிகையாளர்கள் கூட அங்கே அனுமதிக்கப்படவில்லை''. இது டில்லியில் இருந்து வரும் இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்ட செய்தி. இங்கே உள்ள எக்ஸ்பிரஸ் அல்ல.

[திரு. மு. கருணாநிதி] [1978 சனவரி 7

அது போலத்தான் டைம்ஸ் ஆப் இந்தியாவும். இரண்டு நாட்களுக்கு முன் நிதியமைச்சருக்கு, புயல் நிவாரணப் பணிகள் பற்றி புகழ் ஆரம் சூட்டி இருக்கிறது, என்று எடுத்துப் படித்துக் காட்டினார். அந்தப் பத்திரிகை என்ன சொல்லுகிறது என்றால், தமிழ்நாட்டில் திருமதி இந்திரா காந்தி சென்ற இடமெல்லாம் ஏற்பட்ட வன்முறைகளைப் பரந்த அளவில் ஏற்பட்ட கலவரங்களைப் பார்க்கிற போது, அவற்றை இங்கே இருக்கிற மக்களின் வெறுப்பிற்கு அடையாளம் இல்லை என்று விலக்கி விட முடியாது. இந்திரா காந்தியின் அதிகார பூர்வமான ஆசீர்வாதத்தோடு காட்சியளித்த மக்களிடையே எத்தகைய கடுங் கோபத்தை இது ஏற்படுத்தும் என்பதை தமிழ் நாட்டின் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உணரவில்லை. ''டைம்ஸ் ஆப் இந்தியா'' தலையங்கம், பம்பாய் 8-11-1977-ல் இன்றும் இருக்கிறது. இதற்கு என்ன காரணம்? ஜனதா கட்சியோடு உறவும், அதே நேரத்தில் இந்திரா காந்திக்கும் அவர் பிரதமராக இருந்த காலத்தில் தந்ததைப் போன்று மாபெரும் வரவேற்பு. நான் கேள்விப் படுகிறேன் இந்திரா காந்தியை டில்லியில் நமது முதலமைச்சர் சந்தித்த நேரத்தில், என்னுடைய நண்பர்கள் பலம் உள்ளவர்களாக இருந்தால்தான் எனக்கு பயப்படுவார்கள். எனவே எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்களிடம் நேரடியாக இப்போது பகைத்துக் கொள்ளாதீர்கள். நட்பாக இருங்கள் என்று அந்த அம்மையார் சொன்னதாக கேள்விப் பட்டோம். அது உண்மையோ அல்லவோ. நடைமுறையைக் காண்கின்ற நேரத்தில் அப்படிச் சொல்லி இருக்கக் கூடும் என்ற சந்தேகம் கூட எனக்கு எழுகிறது. இல்லாவிட்டால், சர்வாதிகாரம் நடைபெற்ற நேரத்திலும் இன்றைய ஆளும் கட்சிக்காரர்கள் ஆதாயம் பெற்றார்கள். இன்று இந்தியாவில் ஜனநாயகம் வந்த நேரத்திலும் சர்வாதிகார முறையில் தமிழகத்தை ஆளுகின்ற ஒரு மனப்பான்மையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். 'One canno eat the cake and keep it also' என்பது போல அப்பத்தை அருந்தி விட்டு அதை அப்படியே வைத்திருக்கவும் முடியாது என்று சொல்லுவார்கள் ஆனால், சர்வாதிகார ஆட்சியிலும் இன்றைக்கு இருக்கின்ற ஆளும் கட்சிக்காரர்களுக்கு லாபம். இன்றைக்கு இந்தியாவில் நடைபெறுகிற ஜனநாயக ஆட்சியிலும் தமிழ்நாட்டை ஒரு சர்வாதிகாரத் தீவாக வைத்துக் கொண்டு லாபம் பெறுகிற ஒரு நிலை இருக்கிறது.

இல்லை என்றால் இந்த வழக்குகளுக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் அலுவலகத்திற்குள் நுழைந்து, அறிவகம், அன்பகம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற கட்சி அலுவலகம் இவைகளிலெல்லாம் [illegible] அங்கு இருக்கின்ற கணக்குப் புத்தகங்கள் எடுத்துச் செல்லப் பட்டிருக்கின்றன; செயற்குழு, பொதுக்குழு மினிட்ஸ் புத்தகங்கள் எடுத்துச் செல்லப்பட்டு இருக்கின்றன. இது நெருக்கடி

காலத்தில் இந்திரா காந்தி அம்மையாரால் தொடங்கி வைக்கப் பட்ட ஒரு காரியம். இன்று நெருக்கடி தீர்ந்த பிறகும் இந்தியாவில் ஜனநாயகம் இருப்பதாக எண்ணுகின்ற நேரத்தில் ஒரு கட்சி அலுவலகத்தில் போலீசார் நுழைந்து அந்த கட்சியின் கணக்கு ஏடுகளை, என்றைக்கோ நடந்து முடிந்த தேர்தலுக்குச் செலவான கணக்குகளைக் கொண்ட ஏடுகளை இந்த வழக்கோடு சம்பந்தப்படுத்த எடுத்துச் சென்றிருக்கி றார்கள் என்றால் அதை நான் மிகமிக வன்மையாக கண்டிக் கிறேன். செயற்குழு மினிட்ஸ் புத்தகம், பொதுக்குழு மினிட்ஸ் புத்தகம் இவைகளை எடுத்துச் செல்கிற அளவிற்கு இங்கே நெருக்கடி நிலையினைப் போன்ற ஒரு ஆட்சி நடக்கிற தென்று சொல்ல வேண்டியிருக்கிறது.

திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள் கறுப்புக்கொடியை இந்திரா காந்தி அம்மையாருக்கு எதற்காக காட்டவேண்டும் என்று கேட்டு விட்டு, அதற்கு உள் நோக்கம், இரண்டு காரணங் களையும் சொன்னார்கள். ஒன்று, இந்த அரசை கவிழ்க்க வேண்டும் என்ற நோக்கம் என்று சொன்னார்கள். நான் நண்பர் திரு. மாரிமுத்து அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இந்த அரசைக் கவிழ்க்கிற நோக்கம் எங்களுக்கு இல்லை. நாங்கள் கறுப்புக் கொடி காட்டியது இந்திரா காந்திக்குத்தான்; அது வும் தனிப்பட்ட இந்திரா காந்திக்கு அல்ல, சர்வாதிகார கோலோச்சிய இந்திரா காந்திக்கு. நாங்கள் இந்த அரசை கவிழ்க்க வேண்டுமென்று எண்ணியிருந்தால், 'திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் அண்ணா தி.மு.க. ஆட்சியை எதிர்த்து போர் கொடி உயர்த்தி இருக்கிறோம்' என்று சொல்லி இருப்போம். நாங்கள் மக்களாட்சி மீண்டும் மற்றொரு மக்களாட்சியால்தான் மாற்றப்பட வேண்டும் என்ற புனிதமான எண்ணம் கொண்டவர்கள். எனவே, ஒரு அரசை இடையிலே கவிழ்க்கவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை.

திரு. மாரிமுத்து அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். ஒன்று இந்த அரசை கவிழ்க்க வேண்டும் என்ற நோக்கமாக இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் மத்தியிலே இருக்கிறவர் களின் சலுகைகளைப் பெற வேண்டும் என்ற ஆசையாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு அவர்களே தன்னுடைய பேச்சிலேயே மறுப்பும் அளித்திருக்கிறார்கள். என்ன? இந்திய பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் நம்முடைய முதலமைச்சரோடு தொடர்பு கொண்டு இவைகளை அடக்குங்கள்; வன்முறைகளுக்கு இடம் தராதீர்கள்' என்று [illegible] மொரார்ஜி தேசாய் அவர்கள் நம்முடைய முதலமைச்ச [illegible]லிபோன் மூலமாக தொடர்பு கொண்டு கூறினார்கள் என்று சொல்லியதிலிருந்து, இதற்கும் மத்திய அரசிலே உள்ளவர்களுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்

பதை நண்பர் திரு. மாரிமுத்து ஒப்புக்கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். இந்தக் காரியத்தைச் செய்துதான் நாங்கள் மத்தியிலே இருப்பவர்களிடமிருந்து சலுகைகளைப் பெற்றிருக்க வேண்டுமானால் இந்த சங்கடத்திற்கு ஆளாகாமல் நாங்கள் அவசரகாலத்தை கொண்டு வந்தபோது இந்திரா காந்திக்கு 'ஆமாம்' போட்டிருந்தால் அன்றைக்கு மத்திய அரசினுடைய செல்வாக்கைப் பெற்றிருக்க முடியும். எனவே, இன்றைக்கு இந்திரா காந்திக்கு கறுப்புக் கொடி காட்டியிருக்க வேண்டிய தில்லை. அன்றைக்கு அவசர காலச் சட்டத்தை கொண்டு வந்த போதே 'நன்று, நன்று' என்று சொல்லியிருந்தால் இன்றைக்கு அந்த அம்மையாரிடம் ஆளுகின்ற அண்ணா தி.மு.க. பெற்றிருக்கின்ற நற்சான்றினை விட அன்றைக்கே அதிக நற் சான்றை நாங்கள் பெற்றிருக்க முடியும்.

ஒரு மாநிலத்தின் ஆளுங்கட்சியே அவசர காலச் சட்டத்தை ஆதரிக்கிறதென்று பெருமைப்பட்டுக்கொண்டிருப்பார்கள். நாங் கள், அவசர காலச் சட்டத்தை மறைமுகமாக ஆதரிக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு இந்திரா காந்தியின் பதிலே போதுமானது என்று கருதுகிறேன். அவர்கள் என்ன சொன்னார்கள். இந்தியாவிலே எனக்கு எதிராக இரண்டு தீவுகள் இருக்கின்றன. ஒன்று தமிழ்நாடு; மற்றொன்று குஜராத் என்று சொல்லியதிலிருந்தே திராவிட முன்னேற்றக் கழகம் தனக்கு எவ்வளவு எதிர்ப்பாக இருக்கிறது என்பதை அவர்களே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

கறுப்புக் கொடி காட்ட திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் திடீரென்று முடிவு எடுத்தது என்று ஒரு கேள்வி. இந்திரா காந்தி வருவதாக அறிவித்திருந்தபோது இங்கே பெருமழையாக இருந்தது; ஆகவே அவர் வருவார் என்பது நிச்சயிக்கபடாமல் இருந்தது. அவர் நிச்சயமாக வருகிறார் என்று தெரிந்தவுடன் தான் திடீரென்று கழகத்தின் செயற்குழு கூட முடிவெடுத்தது. இப்படி கழகம் கறுப்புக்கொடி காட்ட வேண்டும் என்று முடி வெடுத்தது அன்றைக்கு. அதற்கு மறுநாள் தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கறுப்புக் கொடி காட்ட முடிவெடுத்தது.

[மாலை 6.40]

எப்படி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மத்தியிலிருந்து, ஜனதா கட்சியிடமிருந்து எந்தத் தூண்டுகோலும் வரவில்லையோ, அதே போல தி.மு.க.-விற்கும் மத்தியிலுள்ள ஜனதா கட்சிக் காரர்களிடமிருந்து எந்தத் தூண்டுதலும் வரவில்லை. மற்றவர் களுடைய தூண்டுதல்களால் காரியங்கள் செய்பவர்கள் அல்ல நாங்கள் என்பதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கி[illegible]

சர்க்காரியா பற்றி இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சர்க்காரியா கமிஷனுக்கு குற்றச் சாட்டுகளைத் தந்தேன். ஜனாதிபதியிடத்தில் தந்தேன்.

1978 சனவரி 7] [திரு. மு. கருணாநிதி]

நான் பொருளாளராக இருக்கும்போது பேசப்பட்டது—அதைத் தான் பிறகு குற்றச் சாட்டுகளாக வடித்துக் கொடுத்தேன். அந்தக் குற்றச் சாட்டுகளிலிருந்து எதிர்க்கட்சிக்காரர்கள் நிரபராதிகளாக மீண்டும் வருவார்களேயானால் மெத்த மகிழ்ச்சி அடைவேன் என்று மிக உருக்கமாக நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்:

அப்படிச் சொல்லும்போது எனது உள்ளத்தைக்கூட தொடும் அளவுக்கு, பழைய கால எண்ணங்கள் நெஞ்சைத் தொடுகிற அளவுக்கு இருந்தது. ஆனால், நெஞ்சில் குத்திவிட்டு, எப்படியாவது உயிர் பிழைக்க வேண்டுமென்று சொல்வதைப்போல, குற்றச் சாட்டுகளை அடுக்கடுக்காக அள்ளித் தந்து விட்டு, அதுவும் ஜனதிபதியிடத்தில் தந்துவிட்டு, குற்றச்சாட்டுகள் போதாது என்று மீண்டும் மதுரைக்கு வந்த இந்திரா காந்தியாரிடத்தில் தரப்பட்டது. மகஜர் தயாரித்து, ரெயிலில் சென்று, ரெயில் தாமதமான காரணத்தால், போய்ச் சேர முடியாமல், விமானத்தில் பறந்து இந்திரா காந்தியிடத்தில் கொடுத்து 54-க்கு மேற்பட்ட குற்றச் சாட்டுகளை, கருணாநிதி, நெடுஞ்செழியன், சாதிக் பாட்சா, ப. உ. சண்முகம், அன்பில் தர்மலிங்கம், மாதவன், இப்படி பல அமைச்சர்களை அதிலே ஈடுபடுத்தி, இவர்கள் எல்லாம் ஊழல் புகாருக்கு உள்ளானவர்கள், லஞ்ச ஊழல், பேர்வழிகள், என்று நெஞ்சில் குத்தி விட்டு, நாங்கள் துடிதுடித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், மூச்சு போய்க்கொண்டு இருக்கிற நேரத்தில், குத்தியவர் எதிரில் வந்து, நான் குத்தியது உண்மைதான். நீ எப்படியாவது பிழைத்துக் கொண்டால் மகிழ்ச்சி அடைபவர் என்னைவிட வேறு யாரும் இருக்க முடியாது என்று சொல்வதைப் போல, எனது இனிய நண்பர், புரட்சித் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'நீங்கள் நிரபராதிகளாக வந்தால் மகிழ்ச்சி அடைவோம்' என்று சொல்கிறார் என்று எண்ணுகிறேன்.

அந்தக் குற்றச் சாட்டுகள் யாரால், எப்படி தயாரிக்கப்பட்டன? எனக்குத் தெரியும். இப்போது சொன்னார்கள். கவர்னர் மாளிகையில் ஆட்கள் இருக்கிறார்கள். இப்படித் தகவல்கள் வருகின்றன, என்று. கழக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்திலே, மத்திய அமைச்சர்கள் சிலர் இங்கே உள்ள அவர்களுடைய ஆட்களைப் பயன்படுத்திக் கொண்டு, இங்கே இருக்கிற பைல்களை எல்லாம் தேடிப் பிடித்து, எந்தக் குற்றச் சாட்டில் சிக்க வைக்க முடியும் என்று குற்றச்சாட்டுகளை தயாரித்து அவைகளை நம்முடைய இன்றைய முதலமைச்சரிடத்திலேயும், வேறு சிலரிடத்திலேயும் தந்து கையெழுத்துக்களைப் பெற்றார்கள். அந்தக் குற்றச் சாட்டுகள் அங்கே சென்றன. அந்தக் குற்றச் சாட்டுகள் அங்கே போனபோது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக எழுதிக் கொடுத்தார்.

"This Petition is written by me with all responsibility and sense of duty...."

என்று. அதற்குப் பிறகு சர்க்காரியாவுக்கு தந்த அபிடவிட்—வாக்கு மூலத்தில்

"I most respectfully submit that it is absolutely true.

I have no personal knowledge...."

சொன்ன சங்கதி அத்தனையும் உண்மையா என்று எனக்கு ஒன்றும் நேரடியாகத் தெரியாது என்று சொன்னார். இங்கே ரகுமான் கான் இளித்தவாயன் கிடைத்து விட்டான். பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். பொறுப்பேற்றுக்கொண்டு எழுதித்தர வேண்டுமென்று கேட்கின்றார்கள். அப்படிக் கேட்கிற முதலமைச்சர் அவர்கள் குடியரசுத் தலைவருக்கும் எங்களைப் பற்றி எழுதிக் கொடுத்த மனுவில்

"This petition is written by me with all responsibility and sense of duty...."

என்று எழுதிக் கொடுத்துவிட்டு, சர்க்காரியா கமிஷன் வந்ததும் அதில் எழுதிக் கொடுக்கிறார்,

"I have no personal knowledge about this"

என்று எழுதிக் கொடுக்கிறார்,

இந்த சர்க்காரியா கமிஷன் விசாரணையின் போது, இன்று மனம் உருகப் பேசினாரே, எண்ணிப் பார்க்க வேண்டும், என்னென்ன காரியங்கள் நடைபெற்றன? எத்தனை விதமான சோதனைகள் நடைபெற்றன? நான் ஆட்சி கலைக்கப்பட்ட நேரத்தில் முரசொலி அலுவலகத்தில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்த நேரத்தில்—அப்போது நான் அங்கே எழுதிக் கொண்டிருக்கிறேன்—என் எதிரில் சோதனை நடந்து கொண்டிருக்கிறது. பீரோக்கள் உடைக்கப்படுகின்றன. மேஜைகள் உடைக்கப்படுகின்றன. அங்கே இருக்கிற பூட்டுக்கள் உடைக்கப்படுகின்றன. என்னைச் சுற்றி அதிகாரிகள் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களை சூழ உட்காரவைத்துவிட்டு எழுதிக்கொண்டிருக்கிறேன். இப்படி என்னுடைய இல்லத்தில், எங்களுடைய அலுவலகங்களில், கட்சிப் பணிமனைகளில், எங்களுடைய கழகத் தோழர்களின் இல்லங்களில், எங்களுக்கு எங்கேயாவது தொலைவிடத்து உறவினர்கள் இருக்கிறார்களா, தொலைதூர உறவினர்கள் இருக்கிறார்களா என்று அந்த வகையில் எல்லாம் சோதனைகள் நடைபெற்றன.

குற்றச்சாட்டுக்களைக் கொடுத்துவிட்டீர்கள். கொடுக்கும் போது நீங்களேகூட இது இவ்வளவு கொடூரமாக வரும் என்று எண்ணியிருக்க மாட்டீர்கள். உங்களுடைய நல்ல உள்ளம் கூட உடைந்திருக்கும். என்னென்ன நடைபெற்றன

என் மனைவி—இங்கே இருக்கிற சகோதரிகள் மன்னித்துக்கொள்ள வேண்டும்—எனக்கு நேராக முக்கால் நிர்வாணமாக்கப்பட்டு தன் உடலில் எங்கேயாவது வைரமோ தங்கமோ பதித்து வைத்திருக்கிறாளோ என்று என்னுடைய இரண்டாவது மனைவியின் வீடு சோதனையிடப்பட்டு அவள் சோர்ந்து களைப்படைந்து விழக்கூடிய விதத்தில், கீழே விழுந்து துடிதுடித்துப் போன காட்சியை எனது அருமை நண்பர் ப.உ.ச. அவர்கள் நேரில் பார்த்தார்கள்.

அதிகாரிகள் பல விவரங்களை விசாரிக்கிறார்கள். பலபேர்கள் சென்னையைச் சேர்ந்த அதிகாரிகள். விசாரித்துவிட்டு கேட்கிறார், அரை மணி நேரத்திற்கு பிறகு கேட்கிறார், சார் உங்கள் பெயர் என்ன என்று கேட்கிறார். அதிலும் என்னை அவமானப் படுத்த வேண்டுமாம், களங்கப்படுத்த வேண்டுமாம். இவ்வளவு அக்கிரம வெறியாட்டங்கள் அன்றைய நெருக்கடி காலத்தில் நடைபெறுகிற அளவிற்கு அன்றையதினம் நீங்கள் தந்த குற்றச்சாட்டுக்களை, புகார்களை அவர்கள் பயன்படுத்திக்கொண்டார்கள். இன்னும் அந்தப் புண் ஆறவில்லை. அது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது எங்கே போய் முடியுமோ நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

ஆனால் நாங்கள் சிறையிலிருந்து விடுதலை பெற்றவுடனே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் நிருபர்களைச் சந்தித்துச் சொல்கிறார்கள். மற்ற விசாரணைகள் பற்றி, ஏழு குற்றச் சாட்டுகள் பற்றி விசாரிக்கச் சொல்லி தங்களுக்கு தாக்கீது வந்திருப்பதாக. ஏற்கனவே வந்த தாக்கீதுகளைத்தான் சொல்கிறார்கள். உடனே அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் சொல்கிறார்கள், கருணாநிதி தப்பித்துவிடமுடியாது, அடுக்கடுக்காக வழக்குகள் போடப்படும் என்று அவர் சொல்கிறார். அதே போல் நம்முடைய அருமை நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் சொல்கிறார்கள், கருணாநிதி தப்பவே முடியாது, அவர் வாழ்நாள் முழுவதும் ஜெயிலில் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நான் அப்படிச் சொல்லவில்லை. அதை, ஒரு தலைப்பாக வந்ததை வைத்துக் கொண்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர் வாழ்நாள் முழுவதும் ஜெயிலில் இருக்க வேண்டும் என்று நான் சொன்னதில்லை.

திரு. மு. கருணாநிதி: ஏதோ ஒரு குறிப்பிட்ட காலம். ஏதோ அவர் விரும்புகிற காலம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தளவிற்குச் சொல்லப்பட்டது. ஆனால் அந்த சர்க்காரியா கமிஷனின் ஏழு குற்றச்சாட்டுகள் மாநில அரசுக்கு அனுப்பப்

பட்டன. அந்த ஏழு குற்றச்சாட்டுகளில் சர்க்காரியா என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள்? ஒரு குற்றச்சாட்டு நாதன் பப்ளி கேஷன்ஸ். அதிலே என்ன அவர்கள் முடிவுரை தெரியுமா?

"The Minister, Shri Nedunchezhiyan, was directly responsible for irregularities......"

அது அவர்களுடைய முடிவுரை. அடுத்ததாக, 'Loan to the father-in-law of Thiru S. Kandappan'

அதில் என்ன முடிவுரை தெரியுமா?

"Shri Madhavan, the then Minister for Industries, had exercised pressure on the officials of the Corporation at the time of the sanction and disbursement of the loan as well as for delaying the follow-up action on the Board's Resolution of foreclosure....."

இது சர்க்காரியாவின் முடிவுரை. இந்த இரண்டு பேர்கள் மீது தான் குற்றச்சாட்டுகளை அவர்கள் கண்டுபிடித்து வெளியிட்டி ருக்கிறார்கள்.

அடுத்து, க்ளோப் தியேட்டர். க்ளோப் தியேட்டர்பற்றிச் சொல்லும்போது,

"It has not been established beyond all manner of doubt that the Respondent had received any illegal gratification from Shri Varadaraja Pillai......":

என்பது முடிவுரை.

அடுத்தபடியாக, திரு. ஏ. எல். ஸ்ரீனிவாசன், மறைந்து விட்டார், பாவம். அவர்பேரில் புகார் கொடுத்தது நம் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, ஆனால் அந்தப் புகாரில் இருந்தது. அதற்குக் கூட

"This part of the allegation has thus not been substantiated...."

அதாவது நிரூபிக்கப்படவில்லை.

அடுத்து, ப்ராட்வே டைம்ஸ் பத்திரிகை மீது ஒரு வழக்கு போடப்பட்டது. பிறகு அந்த ஆசிரியர் வருத்தம் தெரிவித்த பிறகு வாபஸ் பெறப்பட்டது. அது உண்மைதான் என்று சர்க் காரியா சொல்கிறார்கள்.

பிறகு ஆறுவதாக, ட்ராக்டர். என்னுடைய நிலத்திற்கு லண்டனிலிருந்து கொடுத்த ட்ராக்டரைக் கொண்டுபோய் திருவாரூர், காட்டூரில், நிலத்தை உழுதேன் என்பது ஒரு

குற்றச்சாட்டு. லண்டனிலிருந்து கொடுத்தவுடனே அதை நான் கோவை விவசாயக் கல்லூரிக்கு பரிசாகத் தந்துவிட்டேன். அது சென்னை துறைமுகத்திற்கு வந்து கோவைக்குச் சென்று நானும், கவர்னர் ஷா அவர்களும், மற்ற அமைச்சர்களும் சென்று அதைப்பரிசாகத் தந்துவிட்டோம், அங்கு நடைபெற்ற ஒரு விழாவில்.

[மாலை 6.30]

ஆனல் அது திருவாரூருக்கு கொண்டு செல்லப்பட்டது என்பது புகார். அந்த விவகாரங்களுக்குள் நான் நுழைய விரும்ப வில்லை. திருவாரூரில் எனக்கு 12 ஏக்கர் நிலம் இருக்கிறது, 12 சாதாரண ஏக்கர், ஸ்டான்டர்டு ஏக்கர் அல்ல. இந்த 12 ஏக்கர் நிலத்தை உழுவதற்கு டிராக்டரால் உழ வேண்டும் என்றல் ஒரு நாள் வேண்டும் அதற்கு சென்னையிலிருந்து ஒரு டிராக்டரை எந்த முட்டாளும்—காலையில் நமது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னர்களே—'ஸ்டுபிடிடி' என்று—அதைப்போல் எந்த முட்டாளும் சென்னையிலிருந்து 250 மைல் அளவுக்கு ஒரு டிராக்டரை திருவாரூருக்குக் கொண்டு செல்ல மாட்டான் அங்குள்ள பஞ்சாயத்து யூனியனிலே 40 ரூபாய் நாள் ஒன்றுக்கு வாடகை கொடுத்தால் எளிதாக வாங்கி கொள்ள முடியும். இதில் சர்க்காரியா என்ன எழுதுகிறர்.........

I hold that allegation (Sl. No. 3) has not been substantiated.

இது நிரூபிக்கப்படவில்லை. ஆனல் இன்னென்றை அதில் சர்க்காரியா எழுதியிருக்கிறர். "இந்த நிலத்தில் டிராக்டர் ஒன்று உழுதிருக்கிறது, அது லண்டன் டிராக்டர் ஆக இருக்கலாம்".. முதலமைச்சருக்கு சாதகமாக சொல்லியிருக்கிறர். நம்முடைய முதலமைச்சர் என்னுடைய நிலம் இருக்கின்ற காட்டூருக்கு வந்திருக்கிறர், ஆனல் என்னுடைய நிலத்தை பார்த்தது கிடையாது. அப்படியிருக்கும்போது அங்கு ஏதோ ஒரு டிராக்டர் உழுதிருக்கிறது, அதைப் பார்த்து விட்டு லண்டன் டிராக்டர் என்று எண்ணியிருக்கலாம் என்று எதை நினைத்துக் கொண்டு சர்க்காரியா எழுதினரோ தெரியவில்லை.

அடுத்தது, தாத்தாச்சாரியார் புகார். அன்பில் தர்மலிங்கத்தைப் பற்றியது.

The allegation that Shri Anbil Dharmalingam helped Shri Tatachariar, a landlord to evict his tenants forcibly from the lands in their possession has not been substantiated.

அதுவும் நிரூபிக்கப்படவில்லை.

அடுத்தது, ஜங்கமராமபுரம் மர்டர் கேஸ்.....

The evidence adduced before the Commission has not been sufficient to establish the fact beyond doubt.

அதுவும் நிரூபிக்கப்படவில்லை. ஆனால் நிரூபிக்கப்பட்டது இரண்டு; அந்த இரண்டும் எங்கே இருக்கிறது?.... அங்கு இருக்கிறது. ஆனால் அந்த இரண்டும் அங்கேயிருக்கின்ற காரணத்தால் சர்க்காரியா கமிஷன் சொல்லியிருப்பது—அப்போதிருந்த நிலையில், அப்போதிருந்த சூழ்நிலை நெருக்கடியில், எப்படி ஸ்டென்ஸில் போட்டு தயாராக வைக்கப்பட்டிருந்த சாட்சியங்களில் கையெழுத்து எப்படியெல்லாம் வாங்கப்பட்டன என்பதையெல்லாம் நாம் அறிவோம்.... எனவே நாவலர் நெடுஞ்செழியன் மீதும், மாதவன் மீதும் சர்க்காரியா தெரிவித்திருக்கும் அறிவிப்புகளை கூட அன்றைக்கு இருந்த சூழ்நிலையில் எப்படியெல்லாம் அமைந்திருக்கும் என்பதால், அவற்றை நாம் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை என்பது தான் நிலைமை. இந்த வகையில் சர்க்காரியா கமிஷனுடைய அறிக்கையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜுடிஷியரியில் பென்டிங்காக இருக்கும்போது இதையெல்லாம் 'ரெபர்' பண்ணலாமா?..............

திரு. மு. கருணாநிதி: நான் குறிப்பிட்டது சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட்டாக இருந்தாலும் இதை ரெபர் பண்ணலாமா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது........ முன்னால் உள்ள ரூலிங்கை வாசிக்கிறேன்..........

You should not refer to any matter on which a judicial decision is pending. The matter has been referred for judicial decision. You are a Doctor. You may not know the Law of Contempt, which operates not from the moment the case starts, but from the moment the possibility of a judicial enquiry arises.

என்று டாக்டர் ஹாண்டே எழுப்பியதற்கு ரூலிங் கொடுக்கப்பட்டிருக்கிறது.

The Law of Contempt with which we are now concerned starts from the time when the possibility of the enquiry arises and the possibility has already arisen.

அதனால் ஜுடிஷியரி என்கின்ற நிலைக்கு போக இருக்கக்கூடிய வைகளைப்பற்றி நாம் பேசக்கூடாது என்றும், ஜுடிஷியரிக்கு போகக்கூடிய விவகாரம் என்கின்ற நிலை இருந்தால் கூட நாம் அதைப்பற்றி பேசக்கூடாது என்று இருக்கிறது, அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: அதனால் தான் நான் குறிப்பிட்டேன், இதில் அமைந்திருக்கின்ற சாட்சியம், அதுபற்றிய விவரங்களை எல்லாம் நான் சொல்லவில்லை. எந்தெந்தக் குற்றச்சாட்டு

கள் அவற்றிலுள்ள தவறுகள் என்ன என்று விசாரித்த சர்க்காரியா கமிஷன் தந்த அறிக்கை 26 ரூபாய்க்கு புத்தகமாக அச்சடிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. அப்படி விற்பனை செய்யப்படுகின்ற புத்தகத்திலுள்ள தகவலைத்தான் தந்தேனே அல்லாமல் வேறு எதுவும் அல்ல.

இப்படிப்பட்ட பெரிய குற்றச்சாட்டுக்களை சாட்டியவர்கள், தங்களுடைய ஆட்சி எப்படி நடத்தப்படவேண்டும் என்பதற்காக சொல்லப்பட்ட கருத்துக்களுக்குப் பதிலாக, சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளையே திரும்பத் திரும்ப அதையே எங்கள் மீது சுமத்திக்கொண்டு, அரைத்த மாவையே அரைத்துக் கொண்டு ஊழல் ஊழல் என்று கூறி, நாங்கள் எல்லாம் உத்தமபுத்திரர்கள் என்று தங்களை கூறிக்கொள்கின்ற நேரத்தில், ஒன்றை மறந்து விடக்கூடாது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதமரிடத்திலும், ஜனாதிபதியிடத்திலும் ஆளுநர் அவர்களிடத்திலும் ஒரு மகஜரை தந்திருக்கிறார்கள். இந்திரா காந்தியின் காக்கஸ் அமைப்பில் சுதிர்சரீன் என்பவர்—யஷ்பால் கபூரின் உறவினர்—மாப்பிள்ளையின் தம்பி—தமிழ்நாட்டில் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்ற நேரத்தில்—45 இலட்சம் ரூபாய் தமிழ்நாட்டுக்கு வருகிறது. இதில் 25 இலட்சம் ரூபாயை சுதிர்சரீன் இங்கு வந்து செக் மூலமாக தருகிறார்.

அது மாற்றப்படுகிறது. பிறகு 20 லட்சம் ரூபாய் ஆயிரம் ரூபாய் நோட்டுக்களாக வருகிறது. அப்படி வந்த ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை மாற்ற முடியவில்லை. உடனே, டெல்லிக்குத் தகவல் பறக்கிறது சென்னையிலே இருந்து. அங்கேயிருந்து சென்னையிலே உள்ள ஜார்ஜ் டவுனிலே உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கியோடு தொடர்பு கொள்ளுங்கள். அங்கே இந்த 20 லட்சம் ரூபாய்க்கான ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் மாற்றிக் கொள்ளலாம் என்கின்ற ஆலோசனை பிறப்பிக்கப்படுகிறது. உடனடியாக அந்த வங்கிக்குச் செல்கிறார்கள். 20 லட்சம் ரூபாய்க்கான ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் சின்னச் சிறு நோட்டுக்களாக அங்கே மாற்றப்படுகின்றன. இதைப் பற்றி ஒரு புகார். இதிலே யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், யாருக்கு அந்தப் பணம் அனுப்பப்படுகிறது என்கிற புகார் உள்துறை அமைச்சர், பிரதம அமைச்சர், கவர்னர், குடியரசுத் தலைவர் ஆகியோருக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களால் கையெழுத்திட்டு தரப்பட்டடிருக்கின்றது. எனவே தான், பொதுத் தேர்தலிலே இப்படி 45 லட்சம் ரூபாய் பேரம் நடத்திவிட்டு, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது ஊழல், ஊழல் என்று பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் நெஞ்சில் கையை வைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, 'பாவா' என்ற ஒருவரோடு லட்சக் கணக்கான ரூபாய்க்கு இங்கேயும், அங்கேயும் பேரம் நடைபெற்றிருக்கிறது. அந்த பாவா என்பவர் யார் என்பது போன்ற விஷயங்கள் எல்லாம் வெளிவரத்தான் போகின்றன. எனவே, ஊழலைப் பற்றிப் பேசுகின்றவர்கள், நாணயம், நேர்மை ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றவர்கள், ஏற்கனவே இருந்த கழக ஆட்சி நேர்மையற்றது, நாணயமற்றது என்று பேசுகின்றபோது, இவைகளையெல்லாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

வெங்கடாத்திரி கமிஷனைப் பற்றி காலையிலே சொன்னார்கள் அந்த வெங்கடாத்திரி கமிஷன் அமைக்கப்படுகிறது. விசாரணையும் நடக்கிறது. அப்படி விசாரணை நடக்கும்போது, புகாரைக் கொடுத்தவரைக் காணவில்லை என்று சொன்னார்கள். இந்த மாதிரி புகாரைக் கொடுக்கின்றவர்கள், காணாமல் போவது தமிழ்நாட்டிலே சகஜம். அப்படிப் புகாரைக் கொடுக்கின்றவர்கள் விசாரணைக்கு வரமாட்டார்கள். அதுபோல் அவர்கள் வராவிட்டாலும், சர்க்காரியா கமிஷன் விசாரணை நடைபெற்றது. அதைப்பற்றி அவர்களுக்கு கவலையில்லை. புகாரைக் கொடுத்தவர்கள் நேரில் வராமல் போனாலும், கமிஷன் விசாரணை நடக்கும். அந்த முறையிலே வெங்கடாத்திரி கமிஷன் விசாரணை நிற்கலாமா? ஒரு சாட்சி விசாரிக்கப்பட்டு விட்டார் என்று வெங்கடாத்திரி குறிப்பு அனுப்பிய பிறகு, அது பெண்டிங்கில் இருக்கின்ற நேரத்திலே, சட்டமன்றத்திலே அந்தச் சட்டத்தை ரத்து செய்கிறார்கள் என்றால், ஒரு அமைச்சரைக் காப்பாற்றுவதற்காக இப்படிப்பட்ட காரியம் நடைபெறுகிறது என்று நாடு எண்ணாதா?

புதுக்கோட்டையிலே, மாவட்ட ஆட்சித் தலைவர் வெள்ள நிவாரண வேலைகளுக்காக, கட்டாயப்படுத்தி பணம் வசூலித்தார் என்று..................

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ஜஸ்டிஸ் வெங்கடாத்திரி கமிஷனிலே புகார் சொன்னவர் இருக்கின்றாரா என்பதே சந்தேகமாக இருக்கிறது. விளம்பரம் கொடுக்கப்பட்டும் ஆள் கிடைக்கவில்லை. அந்த நிலைமைகளை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். புகார் கொடுத்திருக்கின்றவர் சட்டபூர்வமாக விசாரணைக்கு வருவதா, வேண்டாமா என்ற சட்டப் பிரச்னை வேறு. அந்த அடிப்படையிலே ஒரு கமிஷன் அமைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டது என்பதைத்தான் எடுத்துக்காட்டப்பட்டது. புகார் கொடுத்த ஆள் இல்லை என்பதுதான் உண்மை நிலை.

1978 சனவரி 7]

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் சொல்வது புகார் கொடுத்தவரைப் பற்றி அல்ல. ஏற்கனவே விசாரிக்கப் பட்டு, வழக்கு பாதியிலே நிற்கிறது. அந்த நேரத்திலே, இந்தச் சட்டம் ரத்து செய்யப்பட்டு, அந்தக் குழுவே காலி யாக்கப்படுகிறது. அதைத்தான் நான் குறிப்பிட்டேன். யாரைப் பாதுகாப்பதற்காக இந்தச் சட்டத்தை ரத்து செய் தார்கள்? பொதுமக்கள் பிரதிநிதிகள் தவறுகள் புரிந்தால், அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கின்ற சட்டத்தை நீங்கள் ரத்து செய்து விட்டீர்கள்.

நான் புதுக்கோட்டை பற்றிச் சொன்னேன். அங்கே மாவட்டக் கலெக்டர் அவர்கள் வெள்ள நிவாரண வேலை களுக்காக பணம் வசூலிக்கிறார். அப்படி வசூலிக்கக் கூடாது என்று முதல் அமைச்சர் அவர்கள், அப்பணத்தைத் திருப்பித் தரச் சொல்கிறார். அது பாராட்டக் கூடியதாக இருக்க லாம், நான் அதற்குள்ளாக நுழைய விரும்பவில்லை. அது அரசாங்கத்தைப் பொறுத்த நிர்வாக விவகாரம்.

ஆனால், அதே நேரத்தில் திருச்சியிலே நடன நிகழ்ச்சிக்கு பல அமைச்சர்கள் சென்று, நேரடியாக பணம் வசூலித்திருக்கிறார்கள். அது எந்த வகையிலே நியாயம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதே போல் அமைச்சர் கள் பழனிக்குப் போய், அங்கே உள்ள வியாபாரிகளை நேரிலே வரச் சொல்லி யார் யார் எவ்வளவு இன்கம்-டாக்ஸ் கட்டு கிறார்கள் என்பதை பார்த்து, அவர்களிடத்தில் அதற்குத் தகுந்தாற் போல் கட்சிக்காக நிதி வசூலிக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் மக்களுக்காக வெள்ள நிவாரணத்திற்காக வசூலிக்கப்பட்டதைத் திருப்பித் தர சொன்ன முதல் அமைச்சர் அவர்கள், இதிலே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[இரவு 7.00]

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். காலையில் பேராசிரியரும் குறிப்பிட்டார். ஆளும் கட்சியின் சார்பாகத் தவறே நடைபெறவில்லை என்று எண்ணிக்கொண்டி ருக்காதீர்கள்; அவை எல்லாம் வெளிவரும் காலம் அண்மை யில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நான் ஒரு உதாரணத் தைச் சொல்ல விரும்புகிறேன்.

விசைத் தறிகளுக்கு நார்ப்பட்டு விநியோகம் செய்யப் படுகிறது. அந்த விநியோகத்தை முன்பு தமிழ்நாடு ரீஜினல் கமிட்டி செய்தது. இப்போது இவ்வளவு கொடுக்கலாம் என்று தமிழ்நாடு ரீஜினல் கமிட்டி ஒதுக்கீடு செய்கிறது. இத்தனை கதிர் உள்ளவர்களுக்கு இவ்வளவு கிலோ நார்ப்பட்டு கொடுக்கலாம் என்று நிர்ணயிக்கிறது. டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் அசோசியேஷன், காந்திபுரம், குமாரப்பாளையம்

முன்பு ரீஜினல் கமிட்டி அதற்கு மூன்று மாதத்திற்கு செய்த அலாட்மென்ட் 700 கிலோ. அப்படியானால் ஒரு மாதத்திற்கு 234 கிலோ சுமாராக. இதுதான் தரலாம் என்று முன்பு சிபாரிசு செய்தது தமிழ்நாடு ரீஜினல் கமிட்டி. ஒரு மாதத்திற்கு 234 கிலோ நூல் தரலாம் என்று சிபாரிசு செய்கிறது.

ஆனால் அசிஸ்டென்ட் டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ்—ஏ.டி.எச். ஒரு மாதத்திற்கு இப்போது அந்த அசோசியேஷனுக்கு ஒதுக்கியது எவ்வளவு தெரியுமா? 2,780 கிலோ. 234 கிலோ ஒதுக்கலாம் என்ற நிலை எங்கே? ஏ.டி.எச். ஒரு மாதத்திற்கு ஒதுக்குகிற 2,780 கிலோ எங்கே? 2,546 கிலோ ஒவ்வொரு மாதத்திற்கும் அதிகமாக்கப்பட்டிருக்கிறது, மாதந்தோறும். அவர்கள் கேட்டதைவிட, அவர்களுக்கு உரியதைவிட அதிகமாக ஒதுக்கப்பட்டது 2,546 கிலோ. கன்ட்ரோல் விலைக்கும் வெளி மார்க்கெட் விலைக்கும் உள்ள வித்தியாசத்தை வைத்துப் பார்த்தால் ஒரு கிலோவுக்கு ஆறு ரூபாய் லாபம் வருகிறது. ஒரு மாதத்திற்கு அந்த குமாரப்பாளையம் அசோசியேஷனுக்கு $2,547 \times 6 = 15,282$ ரூபாய் லாபம் தரும். இது குமாரப்பாளையம் சம்பவம்.

சேலத்தில், சேலம் ஹாண்ட்லூம்ஸ்கிளாத் மான்யுபாக்சரிங் எக்ஸ்போர்ட்ஸ் அசோசியேஷனுக்கு விசைத் தறிக்கு தமிழ்நாடு ரீஜினல் கமிட்டி முன்பு ஒரு மாதத்திற்கு 12,700 கிலோ ஒதுக்கியது. ஆனால் அசிஸ்டென்ட் டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ் இப்போது ஒதுக்கியிருப்பது 23,610 கிலோ—அதிகமாக 10,910 கிலோ. இதிலே மாத லாபம் 65,640 ரூபாய் வரும். இதிலே தங்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை என்று ஏழை விசைத் தறியாளர்கள் இப்படி யாருக்கோ அதிகப்படுத்திக் கொடுத்துவிட்டார்கள், எங்களுக்குக் கதிர்கள் கிடைக்கவில்லை, நூல் கிடைக்கவில்லை என்று முன்சீப் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். இங்கே எந்தச் செல்வாக்கு பயன்பட்டது? அமைச்சரின் செல்வாக்கா? ஆளும் கட்சி எம்.எல்.ஏ.-க்களின் செல்வாக்கா என்பதை முதலமைச்சர் அவர்கள் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யார் யார் ஈடுபட்டு குமாரப்பாளையம் சம்பவம் நடைபெற்றிருக்கிறது, எப்படிப்பட்ட சிபாரிசுகள் சென்றிருக்க வேண்டுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு மிக முக்கியமான பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையிலும் சரி, வெளியிலும் சரி, நம்முடைய அமைச்சர் பெருமக்கள் பேசுகின்ற பேச்சுக்கள்—முதலில் ஒன்று பேசுவது; மீண்டும் மறுப்பது என்ற முறையில்தான் அமைந்து கொண்டு போகின்றன; நேற்றைக்குக் கூட இந்த அவையில் நம்முடைய உணவு அமைச்சர் எட்மண்ட் அவர்கள், வேணுகோபால் என்ற ஒருவருக்கு, மீனவர்

அல்லாதவருக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு விசைப்படகு ஒதுக்கினார்கள் என்று சொன்னார்கள். கூத்தக்குடி சண்முகம் அவர்கள் எழுந்து ''எல்லோர் பட்டியலையும் தர முடியுமா ?'' என்று கேட்டார். நான் எழுந்து ''எந்த ஆண்டு'' என்று கேட்டேன். தலைவர் அவர்களே, உங்களுக்கு நிச்சய மாகத் தெரியும். 1972 ஆம் ஆண்டு என்று அவர் சொல்ல வில்லை; அவர் சொன்னதெல்லாம் 1969-ல் இருந்து 1976 வரையில் நடைபெற்ற தி.மு.க. ஆட்சியில் என்றார். நான்கூட வேடிக்கையாகச் சொன்னேன், ''அண்ணா ஆண்ட இரண்டாண்டு தி.மு.க. ஆட்சி என்று ஒத்துக்கொள்ளாமல் இருப்பது வேடிக் கையாக இருக்கிறது' என்று சொன்னேன். இதிலே எட்மண்ட் சொன்னார்—''அண்ணா ஆண்ட இரண்டு வருஷங்களும் புனித மான ஆண்டுகள். அதற்குப் பிறகு 1969-ல் இருந்து 1976 வரையிலும் உள்ள காலத்தில்தான் தவறு நடைபெற்றிருக் கிறது; தகுதியற்ற ஒருவருக்குத் தரப்பட்டிருக்கிறது'' என்று குறிப்பிட்டார். திரும்பத் திரும்ப நாங்கள் கேட்டோம். அந்தப் பட்டியல்களை வெளியிட முடியுமா என்று கேட்டோம் அப்போது திரும்பத்திரும்ப 1969 முதல் 1976 வரை என்றுதான் சொன்னாரே தவிர 1972 ஆம் ஆண்டு என்று அவருடைய நாவால் உச்சரிக்கப்படவில்லை. ஆனால் இங்கே அவர்கள் தனக்கு எழுதிக் கொடுத்த கடிதத்தில் அச்சுப் பிழை நேர்ந்து விட்டது '62 என்பது 72 என்றுபோட்டுவிட்டார்கள்' என்று எழுதியதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது.

நான் கேட்கிறேன். அறுபத்திரண்டோ எழுபத்திரண்டோ இங்கே பேசப்பட்டதா? ஆனாலும் தவறாகச் சொல்லிவிட்டு வீண் பழி சுமத்துகிற எண்ணத்தில் என்மீது குறை சொல்லி விட்டு, நாங்கள் இறுக்கிப் பிடித்துக் கேட்கிற நேரத்தில் நான் இப்படிச் சொன்னேன், அப்படிச் சொன்னேன் என்று சமாளிப்பது அமைச்சர்களுக்கு அழகல்ல என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சொன்னால் திருந்திக் கொள்கிறோம், சொன்னால் திருந்திக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். திரு. எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள், பால சுப்பிரமணியம் என்பவரைத் தான் அப்படிச் சொல்லிவிட்டேன் என்கிறார். வேணுகோபால் என்பதற்கும் பாலசுப்பிரமணியம் என்பதற்கும் வேறுபாடு தெரியாமல் சொல்லியிருக்கிறாரா? அந்த பாலசுப்பிரமணியமே எழுதியுள்ள கடிதத்தில் குறிப் பிட்டிருக்கிறார், ''ஆறாம் தேதி அன்று சட்ட மன்றத்தில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் மீது கொண்டு வந்த உரிமைப் பிரச்சினைக்குப் பதிலளிக்கையில் பாரிக் கம்பெனியில் பணிபுரியும் பாலசுப்பிரமணியம் என்பவருக்கு விசைப்படகு வழங்கப்பட்டுள்ளது. அவர் மீனவர் அல்லாதவர். அந்தத் தொழிலுக்கே செல்லாதவர் என்று தெரிவித்து இன்று காலை பத்திரிக்கைகளில் கண்டு வியப்புற்றேன். நான் வழிவழியாக

மீனவர் இனத்தைச் சேர்ந்தவன், கட்டுமரமும் வைத்து மீன் பிடித்து வந்தவன். இன்றும் கட்டு மரம் வைத்து மீன் பிடிப்பவன்தான் நான். பாரிக் கம்பெனியில் பணி புரிவதால் மீனவர் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் சொல்லுகிறாரா? அல்லது மீனவர்கள் பாரிக் கம்பெனி போன்ற நிறுவனங்களில் பணிபுரியக் கூடாது, அவர்கள் மீன் பிடிக்க வேண்டும் என்று 1967 இல் ரூ. 500 காப்புத் தொகை கட்டி மீனிலாகாவிற்கு முறைப்படி விண்ணப்பித்து 1972 ஆம் ஆண்டு இறுதியில் நடந்த குலுக்கலில் விழுந்த விசைப் படகு—(கழக ஆட்சியில் அலாட்மெண்ட் என்று சொல்வதைவிட 100 பேர்கள் தகுதியுள்ளவர்கள் கேட்டால் லாட் போட்டுத்தான் தரப்பட்டது) ஒரு மீனவன் என்ற முறையில் வழங்கப்பட்டுள்ளது'' இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே எழுபத்திரண்டா அறுபத்திரண்டா என்ற பிரச்சினை கிடையாது.

முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நீங்கள் சொல்லுங்கள் திருத்திக்கொள்கிறோம் என்று. ஆனால் அவர்கள் சொல்வதைத் திருத்திக்கொள்ளுகிறார்களா என்றால் அங்கேதான் கௌரவப் பிரச்சினை எழுகிறது.

முதலமைச்சர் அவர்கள் ஒரு விஞ்ஞானக் கருத்தரங்கிலே பேசினார்கள். அவர்களுடைய பேச்சு ரசிக்கத் தக்க பேச்சு. விஞ்ஞான கருத்தரங்கிலே முதலமைச்சர் பேசுகின்ற நேரத்திலே சொன்னார்கள். அது அண்ணா பத்திரிக்கையிலே வந்திருக்கிறது, இந்துப் பத்திரிக்கையிலே கூடபெட்டி கட்டி அது செய்தியாக வந்திருக்கிறது.

Only with the Centre's aid of Rs. 368 crores, medical and other welfare schemes were being implemented for the benefit of four and half crores of people in the State.

என்று செய்தி வந்திருக்கிறது. நாலரைக் கோடி மக்களுக்கு மத்தியஅரசு தருகிறதொகை 368 கோடி ரூபாய் மானியத்திலிருந்து நாம் உதவிகளை நல்வாழ்வுத் திட்டங்களைப் போடுகிறோம்.

இதைப் படித்தவுடனே நான் திடுக்கிட்டேன். ஏனென்றால் 368 கோடி ரூபாய் மத்திய அரசிலிருந்து நமக்கு மானியமாக வருகிறது என்று நான் நிதியமைச்சராக இருந்தபொழுது தெரியவில்லை. என்னுடைய நண்பர் திரு. மனோகரன் நிதியமைச்சராக இருக்கும் பொழுது அதை அவரும் ஒப்புக்கொள்ளமாட்டார் என்பது எனக்குத் தெரியும். அந்த 368 கோடி ரூபாய் மானியமாக வரவில்லை. நம்முடைய மாநிலத்தின் மொத்த வருமானம் நிதியமைச்சர் இங்கே வைத்த நிதி நிலை. அறிக்கையின்படி 633.24 கோடி ரூபாய். வணிக வரியின் மூலம் கிடைப்பதுதான் 368 கோடி ரூபாய். நான்-டாக்ஸ் ரெவின்யூ என்பது 83 கோடி ரூபாய். நம்முடைய மாநிலத்திற்கு மத்திய அரசால் வருமான வரி, மற்றும் தீர்வை வரி ஆகியவற்றிலிருந்து வரவேண்டியது, கொடுத்தே தீர வேண்டும் என்பது 136.98 கோடி ரூபாய். மத்திய அரசு

நமக்கு மானியமாகக் கொடுப்பது 44.73 கோடி ரூபாய்தான். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பேச்சு என்ன ஆகிவிடும்? 368 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் நமக்கு மானியம் தருகிறது என்றால் நாம் அவர்களிடத்திலே பணம் கேட்கவே அருகதையற்றவர்களாகி விடுவோம். அதன் காரணமாகப் பணம் கிடைக்காமல் போய்விடும்.

முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்கிறார்கள், தவறுகளை சுட்டிக்காட்டுங்கள், திருத்திக் கொள்கிறோம் என்று. அந்த வகையிலேதான் நான் ஆக்கப் பூர்வமான ஆலோசனை சொல்லி ஒரு அறிக்கையை விட்டேன். முதலமைச்சர் அவர்கள் அதை மறுக்கவில்லை. நம்முடைய நிதியமைச்சராவது மறுப்பார் என்று எண்ணினேன். என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, அவர் ஊரில் இல்லையோ என்னவோ எனக்குத் தெரியாது, அவரும் மறுக்கவில்லை. 368 கோடி ரூபாய் மானியமாக நமக்குத் தருவதில்லை. திருத்திக்கொள்ளுங்கள் என்று சொல்லப்பட்டது. இது வரையிலும் திருத்திக்கொள்ளவில்லை. அன்று நான் சொன்னது தவறாகிவிட்டது என்று திருத்திக் கொண்டால் என்ன ஆகிவிடும்.

[இரவு 7.10]

இந்து போன்ற பத்திரிக்கையில், அண்ணா போன்ற பத்திரிக்கையில் வெளி வந்திருக்கின்ற செய்தி அது. பத்திரிக்கையாளர்கள் தவறிப் போட்டு விட்டார்கள் என்று சொல்ல முடியாது. அதைத் திருத்திக் கொள்வதில் என்ன தவறு? வாய் தவறிச் சொல்லிவிட்டேன், பார்க்காமல் சொல்லி விட்டேன், அல்லது எழுதியவர் ஏட்டைக் கெடுத்தார் என்பதுபோல் எழுதிக் கொடுத்தவர்கள் அப்படிக் குறிப்பு எழுதிக் கொடுத்து விட்டார்கள் என்று சொல்லி, மாநில மக்களுடைய நல்வாழ்விற்காக, மக்களுடைய நல்ல உரிமைக்காக, அந்த உண்மையை ஒப்புக் கொண்டால், எதிர்க் கட்சித் தலைவர் சொல்கிறாரே என்று ஒப்புக்கொண்டால் என்ன கௌரவம் பாதித்து விடும் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

இறுதியாக ஒன்றைச் சொல்கிறேன். நம்முடைய பேராசிரியர் அவர்களும் மற்றவர்களும் ஒன்றைச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் முந்தைய அரசு கட்டிடங்களுக்கு வைத்த உயிரோடு உள்ள தலைவர்களுடைய பெயர்களை எல்லாம் எடுக்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது, இது நியாயம்தானா, தேவைதானா என்ற ஒரு பிரச்னையை இங்கே எழுப்பினார்கள். நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். உயிரோடு உள்ளவர்களுக்கு எதற்காகச் சிலைகள், உயிரோடு உள்ளவர்ககளுக்கு எதற்காகப் படத் திறப்பு விழாக்கள், உயிரோடு உள்ளவர்களுக்கு எதற்காக மன்றங்கள், இப்படிக் கேட்கப்பட்ட காலம் ஒன்று இருந்தது. நம்முடைய

முதலமைச்சரவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலே யிருந்த காலத்திலே எம்.ஜி.ஆர். மன்றங்கள் வைக்கப்பட்ட போது கூட இன்றைக்கு அவருடைய கட்சியிலே மிகத் தீவிர மாக இருக்கின்ற நண்பர் நம்முடைய எஸ். ஆர். இராதா போன்றவர்கள் நண்பர் சம்பத் அவர்களோடு சேர்ந்து கொண்டு மன்றங்களை உயிரோடு இருப்பவர்களின் பெயரால் திறக்கக் கூடாது என்று மிக முனைப்பான அரசியல் முன்னணி வீரராகத் திகழ்ந்தார்கள். ஆனாலும் எம்.ஜி.ஆர். மன்றங்கள் ஆயிரக் கணக்கில் வைக்கப்பட்டன. இது அரசியல் கட்சி விவகாரம்.

ஆனால் ஆட்சி என்ற முறையிலே பார்த்தாலும்கூட இவை களை வைப்பதிலே என்ன தவறு? நான் என்னுடைய பெயர் வைக்கப்பட வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை, என்னுடைய பெயரை எடுத்து விடுகிறார்களே என்ற கவலை யால் சொல்லவில்லை. நான் உளம்திறந்த ஒரு அறிக்கையே விட்டேன். ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் பெரியார் சிலை திறப்பு விழாவில் பேசுகின்ற பொழுது கருணாநிதி சிலை பற்றிப் பிரச்னை கள் வந்திருக்கின்றன, நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன் என்று பேசியிருக்கிறார்கள். அதைக்கூட எதிர்பார்க்க வேண் டாம், தயவு செய்து இப்பொழுதே எடுத்து விடுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தேன். அந்தச் சிலை இருப்பதால் தான் கருணாநிதியின் பெயர் இருக்கும் என்றால் அப்படிப்பட்ட ஒரு சிலை எனக்கு தேவையில்லை.

அதைப்போலத்தான் இப்பொழுது உயிரோடு உள்ளவர்களின் பெயர்கள் கல்லூரிகளுக்கோ, பள்ளிகளுக்கோ, பாலங்களுக்கோ இருந்தால் எடுத்து விட வேண்டுமென்று அறிக்கை விடப் பட்டிருக்கிறது. ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. அண்ணா அவர்கள் காலத்திலே அண்ணா அவர்களின் பெயரால் கல்லூரி அமைந்தது, காமராஜ் அவர்களுடைய காலத்திலேதான் காமராஜ்சாகர் வைக்கப்பட்டது. காமராஜ் அவர்களுடைய காலத் திலேதான் காமராஜருடைய சிலை அவர் உயிரோடு இருந்த பொழுதுதான் திறக்கப்பட்டது. காமராஜர் மின்சார நிலையம் என்று திருச்சியில், வேலூரில், பலயிடங்களில் மின்சார நிலையங் களுக்கு, அலுவலகங்களுக்கு காமராஜர் பெயரால் அவர் உயிரோடு இருந்தபொழுது அந்தப் பெயர் இடம்பெற்றிருக்கிறது. திருச்சியில் காமராஜ் வளைவு அவர் உயிரோடு இருந்தபொழுது தான் வைக்கப்பட்டது. இங்கேயிருக்கின்ற இராஜாஜி ஹாலுக்கு இராஜாஜி அவர்கள் உயிரோடு இருந்தபொழுதுதான் அந்தப் பெயரைச் சூட்டினார்கள்.

இவைகளையெல்லாம் நான் வாதிடுவது என் பெயர் இருக்க வேண்டும் என்பதற்காக அல்ல. என்னுடைய பெயரை எடுத்து விடுங்கள். என்னுடைய பெயரின் அடிச்சுவடே இல்லாமல் அழித்து விடுங்கள், அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை.

நமக்கு மானியமாகக் கொடுப்பது 44.73 கோடி ரூபாய்தான். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பேச்சு என்ன ஆகிவிடும்? 368 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் நமக்கு மானியம் தருகிறது என்றால் நாம் அவர்களிடத்திலே பணம் கேட்கவே அருகதையற்றவர்களாகி விடுவோம். அதன் காரணமாகப் பணம் கிடைக்காமல் போய்விடும்.

முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்கிறார்கள், தவறுகளை சுட்டிக்காட்டுங்கள், திருத்திக் கொள்கிறோம் என்று. அந்த வகையிலேதான் நான் ஆக்கப் பூர்வமான ஆலோசனை சொல்லி ஒரு அறிக்கையை விட்டேன். முதலமைச்சர் அவர்கள் அதை மறுக்கவில்லை. நம்முடைய நிதியமைச்சராவது மறுப்பார் என்று எண்ணினேன். என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, அவர் ஊரில் இல்லையோ என்னவோ எனக்குத் தெரியாது, அவரும் மறுக்கவில்லை. 368 கோடி ரூபாய் மானியமாக நமக்குத் தருவதில்லை. திருத்திக்கொள்ளுங்கள் என்று சொல்லப்பட்டது. இது வரையிலும் திருத்திக்கொள்ளவில்லை. அன்று நான் சொன்னது தவறாகிவிட்டது என்று திருத்திக் கொண்டால் என்ன ஆகிவிடும்.

[இரவு 7.10]

இந்து போன்ற பத்திரிக்கையில், அண்ணா போன்ற பத்திரிக்கையில் வெளி வந்திருக்கின்ற செய்தி அது. பத்திரிக்கையாளர்கள் தவறிப் போட்டு விட்டார்கள் என்று சொல்ல முடியாது. அதைத் திருத்திக் கொள்வதில் என்ன தவறு? வாய் தவறிச் சொல்லிவிட்டேன், பார்க்காமல் சொல்லி விட்டேன், அல்லது எழுதியவர் ஏட்டைக் கெடுத்தார் என்பதுபோல் எழுதிக் கொடுத்தவர்கள் அப்படிக் குறிப்பு எழுதிக் கொடுத்து விட்டார்கள் என்று சொல்லி, மாநில மக்களுடைய நல்வாழ்விற்காக, மக்களுடைய நல்ல உரிமைக்காக, அந்த உண்மையை ஒப்புக் கொண்டால், எதிர்க் கட்சித் தலைவர் சொல்கிறாரே என்று ஒப்புக்கொண்டால் என்ன கௌரவம் பாதித்து விடும் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

இறுதியாக ஒன்றைச் சொல்கிறேன். நம்முடைய பேராசிரியர் அவர்களும் மற்றவர்களும் ஒன்றைச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் முந்தைய அரசு கட்டிடங்களுக்கு வைத்த உயிரோடு உள்ள தலைவர்களுடைய பெயர்களை எல்லாம் எடுக்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது, இது நியாயம்தானா, தேவைதானா என்ற ஒரு பிரச்னையை இங்கே எழுப்பினார்கள். நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். உயிரோடு உள்ளவர்களுக்கு எதற்காகச் சிலைகள், உயிரோடு உள்ளவர்ககளுக்கு எதற்காகப் படத் திறப்பு விழாக்கள், உயிரோடு உள்ளவர்களுக்கு எதற்காக மன்றங்கள், இப்படிக் கேட்கப்பட்ட காலம் ஒன்று இருந்தது. நம்முடைய

in Tamil Nadu, a bus-stand is opened and it is named after a D.M.K. leader unfortunately me. And the whole Congress machinery of Tamil Nadu gets so inflamed, that injunction orders are obtained the board there has been removed, the bill books that had been printed have been taken back and the case is proceeding. And the President is asking us for a spirit of co-operative endeavour......."

என்று அண்ணா அவர்கள் பேசினார்கள். அண்ணா அவர்களுடைய பெயரால் ஒரு பஸ் ஸ்டாண்டுக்குப் பெயர் வைக்கப்பட்டதை அன்றைக்குக் காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தார்கள், காங்கிரஸ் ஆட்சியாளர்கள் எதிர்த்தார்கள் என்பதை அண்ணா அவர்கள் இராஜ்ய சபாவிலே சுட்டிக்காட்டிப் பேசினார்கள் என்றால், உயிருள்ள அவர்கள் பெயரால் எந்தக் கட்டிடமும் இருக்கக்கூடாது என்பதற்காகப் பேசிய பேச்சு அல்ல அது என்பதை நாம் தெளிவாகப்புரிந்து கொள்ளவேண்டும்.

ஆகவே, பேராசிரியர் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து நானும் சொல்கிறேன், என்னுடைய பெயர்களை, எங்கிருந்தாலும் அங்கே எடுத்து விடுங்கள். நான் அவைகளைப் பற்றிக் கவலைப்பட வில்லை. இந்த ஒரு பெயரை எடுப்பதற்காக, மற்ற பெயர்களை அழிக்கின்ற காரியத்திலே இந்த அரசு தயவுசெய்து ஈடுபட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பெயரை எங்கே அழித்தாலும் ஓய்வில்லாது உழைத்த ஒரு தமிழன் இங்கே ஓய்வெடுத்துக் கொள்கிறான் என்று அங்கே என்னுடைய கல்லறையிலே எழுதப்படுகிற அந்தப் பெயரை ஒருவேளை கடல்கொண்டு அழிக்கலாமே தவிர, வேறு யாரும் அழிக்கமுடியாது. எனவே அந்தப் பெயர் நிலைத்தால் எனக்குப் போதும் என்கின்ற அந்த உணர்ச்சியோடு இதைச் சொல்லி—இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பல கட்சித் தோழர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஏற்பட்ட தவறுகள் சிலவற்றைச் சுட்டிக் காட்டினார்கள். தவறுகளுக்கு நாங்கள் ஆளாகியிருப்போமானால், அதற்காகத் திருந்திக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். எனவே, அந்தக் கட்சி நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு ஆளுங்கட்சியினர் இதைக் கொண்டு வந்த நோக்கத்தைப் புரிந்துகொண்டு அவர்கள் ஆற்றிய உரைக்காக அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் இந்த அளவில் என்னுடைய கருத்துக்களை எடுத்துத் தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: உயிரோடு இருக்கிறவர்களுடைய பெயர், மற்றவர்களுடைய பெயர் இருக்கும்போது கலைஞர் அவர்களுடைய பெயர் இருக்கக்கூடாது என்று கருதுகிறவன் அல்ல நான். எடுத்தால், மொத்தமாக எடுக்கவேண்டு